


# கணிதன்

## அமரர் ச. தில்லையம்பலம்

## நிறைவு மலர்

உ

குகமயம்

# கணிதன்

புகழ்பூத்த கணித ஆசிரியரும்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
முன்னாள் அதிபருமாகிய

**அமரர் சரவணமுத்து தில்லையம்பலம்**

அவர்களின்
வாழ்வு நிறைவு குறித்த மலர்

**திருவாதணி - இமையாணன்**

**உடுப்பிட்டி**

**18.05.2014**

# சமர்ப்பணம்

பணியதுவே பணியதுவாய்க்
கொண்டிருந்த தெய்வம் நீர்
அணியது உம் அறிவுடமை
அன்பது உம் பண்புடமை
கணிதமது மாணவர்க்குக்
கனிந்திடவே செய்ததனால்
'கணிதன்' எனும் மலரினையாம்
கனிவுடனே படையலிட்டோம்.


இங்ஙனம்
குடும்பத்தினர்

# பொலிகண்டிக் கந்தவனம்
# திருவருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி



"வேலும்மயி லுந்துணை யெனச்சாத காலமும்
விருப்புட னுரைக்க வருள்க
வெம்பிணிக ளாலுமிடி யாலுமுட லோடுள
மெலிந்திடா வண்ண மருள்க
காலுமுக மாறுநின தம்பவள வாயுங்
கனாவினு நினைக்க வருள்க
காலன்வரு மந்திய தினத்திலுயிர் சற்றுங்
கலங்கா திருக்க வருள்க
மேலுமொரு தாய்வயின் விடுத்திடினு மாசைவ
மெய்ந்நிலையி னிற்க வருள்க
வேறுபல வுண்டெனினு மெற்கிவைக ளேபெரிது
வேண்டும் வேண் டுந்தெய்வமே
மாலுமய னுஞ்சுருதி நாலுமுடிவோர் வரிய
வள்ளலே கந்தவன மேல்
வருமமல பரமசிவ குருபரமெய் வரதர்புகழ்
வரதவுல கருண்முருகனே."

- உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர்



மனிதனாய்
26.03.1939

கனிதனாய்
18.04.2014

## புகழ்பூத்த கணித ஆசிரியர்

# அமரர் சரவணமுத்து தில்லையம்பலம்

(ஓய்வுபெற்ற அதிபர் - உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுஜெய சித்திரையின் வீரிரண் டாமென்று
பூண்டுவரு மத்தியிற் போயினான் - சேண்டிகழு
மவ்வுலகு மாசிரிய னான றில்லை
இவ்வுலகு தன்னை யிகந்து

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அந்தணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன் மற்றென் னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழிற் திருப்புன் கூருளானே.

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருபத்தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் நான் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த
அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழு தருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும்கழற உழறி
உமை மணவாள னுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும் பொன் மாமயிலாய் போற்றி
முன்னிரு கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாருதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி.

## திருப்புகழ்

பிறவியலை ஆற்றிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற்று உழலாதே
உறுதிதரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுள் அறிவார் குணக் கடலோனே
குறுமுனிவர் ஒத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## அமரர் ச.தில்லையம்பலம் அவர்களின்
## ஆத்மசாந்தி வேண்டிக் கடவுளர்மீது பாடியவை

(ஆக்கம் - புலவர்மணி கா.நீலகண்டன்)

### துவாளி விநாயகர்

### வெண்பா

ஆனை முகப்பெருமா னன்ப ரகப்பெருமான்
ஞானவுரு வாந்துவாளி நற்பெருமான் - ஈனப்
பிறப்பறுத் தேயெம்மைப் பேரின்ப மென்றும்
உறப்பண்ணு முள்ள முவந்து.

### கந்தவனம் கல்யாணவேலவர் சுவாமி
### (வன்னி மரத்தான்)

ஆதி யந்த மற்ற பிரான்
அழக னாகி யுற்ற பிரான்
சோதிச் சுடரா யுள்ள பிரான்
தொல்லை யல்ல னீக்கு பிரான்
வேதங் காணா துள்ளபிரான்
வேலைக் கரத்திற் கொண்ட பிரான்
நீதி வடிவா யுற்ற பிரான்
நெஞ்ச மெல்லா முற்ற பிரான்.

அன்னை யுமையாள் பெற்ற பிள்ளை
ஆதியந்த மற்ற பிள்ளை
இன்ன விடரைப் போக்கு பிள்ளை
எங்கு மெல்லா மான பிள்ளை
வன்னி மரக்கீழ் வயங்கு பிள்ளை
வாழ்வு தேவர்க் கூட்டு பிள்ளை
இன்பத் துலகை யாட்டு பிள்ளை
எளியேன் பவத்தை வீட்டுபிள்ளை.

## மாத்தோட்டை சிவஞான வைரவர்

பூத்தோட்டம் நிறையன்பு பொலிதோட்டம் சிவசமயப்
பாத்தோட்டம் வளர்தோட்டம் பத்தியது மிகுதோட்டம்
நாத்தோட்டம் வளர்தோட்டஞ் செழுந்தோட்ட மாவிளங்கு
மாத்தோட்ட வயிரவர் கமலத்தாள் பெருந்துணையே.

## குழவியடி அம்மன்


மாசறு பொன்னே போற்றி வலம்புரி முத்தே போற்றி
காசறு விரையே போற்றி கன்னலின் சாறே போற்றி
நீசமில் காவே போற்றி நினைப்பவர் துணையே போற்றி
பாசத்தை யொழிப்பாய் போற்றி பகர்குழவிப் பதியாய் போற்றி.



மனிதனாய் உதித்த கணிதன்




அரங்கில் உரையாற்றும் ஆளுமை



நேர்மையாளரின் நேர்கொண்ட பார்வை

# அமரர் சரவணமுத்து தில்லையம்பலம் அவர்களின் வாழ்க்கைச் சித்திரம்

ஈழவள நாட்டில் சகல வளங்களும் நிறைந்த பகுதி வடமராட்சி. இப்பகுதியில் உடுப்பிட்டி என்னும் ஊர் இயற்கையான அழகுப் பொலிவோடு விளங்குவதோடு பல்தொழில்சார் விற்பன்னர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதே வேளையில் அறிவுசார் விஞ்ஞான மேதைகள், கணித மேதைகள், அரசியல்வாதிகள், இலக்கியக்கர்த் தாக்கள், சட்டவல்லுனர்கள், வைத்திய கலாநிதிகள் என்பவர்களால் அன்றும் இன்றும் பெருமை அடையும் பிரதேசம். காலத்துக்குக் காலம் இத்தகையவர்களை உருவாக்கும் கல்விச்சாலைகளையும் நிறுவனங்க ளையும் தன்னகத்தே கொண்டிருப்பதோடு ஆன்மீகத்துறையிலும் வளர்ச்சி பெற்ற இடமாகும்.

இப்பகுதியில் சைவப்பாரம்பரியம் மிக்க திருவாதணி எனும் இடத்தில் வாழ்ந்த சரவணமுத்து தில்லையம்பலம் அவர்களுக்கும் நவிண்டிலைச் சேர்ந்த பொன்னம்மா என்பவர்க்கும் 1939ம் ஆண்டு பங்குனி மாதம் 26ம் திகதி அவதரித்த தவப்புதல்வன் அமரர் தில்லையம்பலம் ஆவார். பிறந்த இரண்டு நாட்களிலேயே எதிர்பாராத நோயினால் தாயை இழந்த தனயரானார். ஒரு வருட மணவாழ்க்கையில் இரண்டு நாட்குழந்தையைப் பரிசாகத் தன்கையில் ஏந்திய தந்தை, மனைவி வழி உறவினர் உதவியுடனும், அதே நேரத்தில் ஞானசம் பந்தருக்கு உமைஅம்மை ஞானப்பாலூட்டியதுபோலப் பசியால் வாடிய குழந்தைக்குத் தாய்ப்பாலூட்ட வசதியான அன்னையர் சிலர் அன்புடன் முன்வந்தனர். அவருக்குப் பாலூட்டி ஆதரித்தனர். தந்தை சரவணமுத்து அவர்கள் தன் அருமை மகனுக்காகவே மறுமணம் செய்யாது தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

அமரர் தமது ஆரம்பக்கல்வியைக் கரணவாய் தாமோதரா வித்தியாலயத்திலும், தொடர்ந்து பொதுத்தராதரப் பத்திர வகுப்பு வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்றுச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றார். உயர்தரக் கல்வியில் கணிதப் பிரிவைத்

தேர்ந்தெடுத்த இவர் யாழ் இந்துக் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார். கற்கும் காலத்தில் கணித, பௌதீக பாடங்களைத் தெளிவாக விடயங்களை ஆர்வமாக உள்வாங்கியதோடு தம்முடன் சேர்ந்தவர்களுக்கு அவற்றை இலகுவாக விளங்கவைத்துக் காலப் போக்கிற் சிறந்த மாணவ ஆசிரியனாகவே தன்னை உருவாக்கிக் கொண்டார். அக்கால சட்ட முறைப்படி பல்கலைக்கழக முதற் தேர்வில் பொறியியற் பகுதிக்கு இவர் நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட போதும் இரசாயன பாடத்தில் குறிப்பிட்டளவு புள்ளிகளைப் பெறத்தவறிய மையால் அது கிடைக்கவில்லை. கணிதபாடத்தில் இவர் திறமையைக் கண்டு பட்டப்படிப்பிற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு முதல் மாணவனாகப் பெறுபேறு பெற்ற போதும் குறிப்பிட்ட பாடத்தில் உரிய புள்ளிகள் பெறத் தவறியமையால் அதுவும் கைநழுவியது. தமக்குப் பிடிக்காத ஒன்றைத் தொடர விரும்பாத இவரது சுபாவமோ அல்லது எதிர்காலச் சந்ததியினருக்கு இவர் சேவை கிடைக்க வேண்டுமென்ற தெய்வத்தின் தீர்ப்போ ஒரு சாதாரண பயிற்றப்பட்ட கணித ஆசிரியன் என்ற பட்டத் துடன் மட்டும் உயர்தர வகுப்புக் கணித ஆசிரியனாக, உதவி அதிபராக, அதிபராக எல்லாம் கடமை ஆற்றினார்.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பின்னர் மஸ்கேலியா சென் யோசேப் கல்லூரியிலும், 1972 - 1978 வரை கம்பளை ஸகிராக் கல்லூரியிலும், 1978 - 1999வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கடமையாற்றினார். இங்கு இவர் கடமையாற்றிய கால இடைவெளியில் போர்க்காலச் சூழ்நிலையில் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அவற்றுக்கு அடிபணியாது கல்லூரிக் கட்டடங்கள் அழிக்கப்பட்டாலும் மாணவர் கல்வி மழுங்காது பாடசாலைச் சூழல்களிலும், விளையாட்டு மைதானத்திலும், தனது வீட்டிலும் அதிபர் ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர் கல்வியைக் கட்டிக்காத்தார். இக் காலப்பகுதியில் பாடசாலைப் பழைய மாணவ சங்கத் தலைவராக இருந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்த பழைய மாணவர் களை ஒன்றிணைத்து கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த பேராசிரியர் அன்றைய யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜாவை அவர் நினைவு கூராத நாள் இல்லை.



தாய், தந்தையாகப் பேணிய சான்றோர்



கைத்தலம் பற்றிய கனிவுறு காட்சி
கணிதமும் தமிழும் சேர்ந்த நற்காட்சி



நண்பர் நடுவினிலே நட்பின் இலக்கணமாய்



அதிபராய்ச் சொற்பொழியும் அற்புதப்பொலிவு

அமரர் தில்லையம்பலம் அவர்கள் 1973ம் ஆண்டு அதே ஊரைச் சார்ந்த பசுபதி கமலமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி இராஜேஸ்வரி ஆசிரியையைப் பெரியோரின் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்தார். இக்காலப் பகுதியில் இவர் கம்பளை ஸகிராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். எனினும் கல்லூரி நாட்கள் தவிர்ந்த நாட்களில் பெரும்பாலும் ஊருக்கு வந்து மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதிலேயே நேரத்தைச் செலவிடுவார். அதே நேரத்தில் கடமையாற்றிய கல்லூரி யிலும் கணிதத்துறையில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்ததால் "குரு" என்று சொல்லி அழைக்கும் அனைத்துக் கல்விச் சமூகத்திலும், பெற்றோர் மத்தியிலும் அவருக்குப் பெருமதிப்பு இருந்தது.

இதே நேரத்தில் இவர் பல இடர்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தாயற்ற பிள்ளையாக இருந்த அவரை வளர்த்த தந்தை மற்றும் இவரையே ஒரே வாரிசாக நம்பியிருந்த வயது முதிர்ந்தவர்கள் எல்லோரையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு இவரையும் இவர் மனைவியையுமே சார்ந்தது. பல இன்னல்களுக்கு மத்தியில் ஊருக்கு மாற்றம் பெற்று வந்து அவர்கள் வசதியுடன் வாழ்வதற்கேற்ற வீடு ஒன்றைத் தனது இடத்திலேயே அமைத்து அவர்களை இருத்தி வேண்டிய பணிவிடைகள் செய்தார். அவர்களுக்கு உரிய நேரத்தில் இறுதிக்கிரியைகள் செய்ததோடு அவர்களுக்குச் செய்ய வேண்டிய பிதிர்க்கடன்களையும் நிறைவு செய்தார். தன் உறவினர்களுக்கு மட்டுமன்றித் தன் மனைவி சார்ந்தவர்களுக்கும் செய்ய வேண்டியவற்றில் அவர் தவறியதில்லை.

இவரது மூத்த பிள்ளை ராஜ்குமார், இவர் ஒரு மின் பொறியி யலாளர். இவர் இசையுடன் இணைந்த ஒரு நிறுவனத்தை நடாத்து கின்றார். இரண்டாவதாகப் பிறந்தவர் வேணுகா என்னும் மகளாவார். இவர் ஒரு பல்வைத்திய நிபுணர். அவருக்குத் தனது உறவினரான திரு நடராஜா செல்லம்மா தம்பதியினரின் மகனும், சேவை மனப்பாங்கு மிக்கவருமான வைத்திய கலாநிதி குகதாசனை உற்றார், உறவினர் நல்லாசியுடன் திருமணம் செய்து வைத்தார். இவர்களுக்கு இராதேசியாம், வித்தியராம் என்னும் இரண்டு ஆண் குழந்தைகள்

உண்டு. கடைசி மகளான வைத்திய கலாநிதி பானுவிற்குத் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்களும் தற்பொது கொழும்பில் வசிப்பவர்களுமாகிய வீரகுலசிங்கம் (இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்) றஞ்சி (மக்கள் வங்கி) தம்பதியினரின் மூத்தமகன் பிரசன்னாவை (கணினி வர்த்தகத்துறை நிபுணர்) பெரியோர் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்து வைத்தார். இவர்களுக்கு ஹரிஷ், பீஷ்மன் என்னும் இரண்டு ஆண்குழந்தைகள் உண்டு.

அமரரின் பிள்ளைகள் பெரும்பாலும் போர்க்கால சூழ்நிலையிலேயே தமது உயர்தரக் கல்வியைக் கற்றார்கள். இத் தருணத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் பிள்ளைகளின் கல்வி ஆர்வத்தினாலோ, அமரர் மேல்வைத்த அபிமானத்தினாலோ பிள்ளைகளிடமிருந்து எந்தக்கட்டணமும் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமரர் திரு. தில்லையம்பலம் மாணவப்பருவத்திலேயே பிள்ளை களுடன் அன்பாக அரவணைத்துத் தமது கற்பித்தலை ஆரம்பித்தார். இவரிடம் உணர்ச்சிவசப்படும் தன்மையும் அரிதாகக்காணப்பட்டது. தனியார் வகுப்புக்குச் சென்று நடாத்திக்கொண்டிருக்கும்போதே முதலாவது நோய் ஏற்பட்டது. அதன்பின் சிறிதான உபாதைகள் இருந்து வந்தன. 1997ல் உபஅதிபராகப் பணியாற்றியபோது பக்கவாதம் வந்து இடது கால், கை என்பன ஓரளவு செயலிழந்தன. அதன் பின்பும் தனது கற்பித்தலைத் தொடர்ந்தார். 1999 மார்ச் 25 பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வின் பின்பும் கற்பித்தல் பணி ஓயவில்லை. முழுமையாகக் கிரகிக்கும் ஆற்றல் குறைந்தும், முடிந்தளவு மாணவர் கேட்கும் பகுதிகளை 18.04.2014 தனது இறுதிநாள்வரை கற்பித்துக் கொண்டேயி ருந்தார். "இன்று இது போதும் அடுத்த வகுப்பில் பார்ப்போம் " என்று கூறி வகுப்பை முடித்தார். அந்த ஒலி இப்போதும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இனி "சேர்...." என்று அழைத்துக்கொண்டு வரும் மாணவச் செல்வங்களுக்கு என்ன சொல்வது...?




பிள்ளைகளோடு பிள்ளையான தந்தை



மகள் வேணுகாவின் மணக்கோலத் திருநாளில்



மகள் பானுவின் மணக்கோல நன்னாளில்



பேரனுடன் பேசி மகிழ்ந்திருக்கும் மாண்பு

# வட்டம் என்றால் என்ன...?

(வைத்திய கலாநிதி பானு தில்லையம்பலம் - மகள்)

அப்பா........

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் இவரது உருவம் மனதில் படிந்து இருப்பது ஒரு சோக்துண்டுடனும் கரும்பலகையுடனும் உடுப்பிட்டி வீட்டின் வகுப்பறை மத்தியில்தான். இது ஏனோ தெரியவில்லை. நான் நினைக்கிறேன், இவரது வாழ்க்கையை ஆசிரியத் தொழிலும் அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் அளவுக்கதிகமாக ஆக்கிரமித்தவை யாக இருக்கலாம். இவற்றையெல்லாம் தாண்டி எமக்கு ஒரு சிறந்த அப்பாவாக இவர் இருந்தார் என்பது மறுக்க முடியாதது. சின்னச்சின்ன விடயங்களையும் கவனித்துச் செய்வதிலிருந்து தோளில் சாய்ந்து நித்திரையாக்கும் வரைக்கும், எனது சிறுவயது வாழ்க்கை நிழற்படமாக நினைவிருக்கிறது.

"தில்லையம்பலம் மாஸ்ரரின் மகள்", "ஐயாவின் மகள்" இதுதான் சிறுவயது முதற்கொண்டு மருத்துவபீடம் செல்லும் வரைக்கும் எனது முகவரியாக இருந்தது. ஏன் இன்றும் பல சந்தர்ப்பங்களில்..... அப்பொழுது எல்லாம் என்னையறியாமல் எனக்குள் ஒரு பெருமை எட்டிப் பார்க்கும், "ஓ...! நான் அப்பாவின் மகள்" என்ற பிரமிப்பும் வந்து போகும். "பானுவின் அப்பா" என்ற அறிமுகப்படலத்தின் போதெல்லாம் என் மனம் "மழுக்" என்று ஒடிந்து போயிருக்கிறது. அப்பொழுதெல்லாம் நான் அப்பாவின் முகத்தைப் பார்ப்பேன். அது சிலவேளையில் விகசித்து "இருப்பது போலத் தோன்றும். நான் எப்பொழுதும் அவரைக் கேட்க நினைத்துக் கேட்காமல்விட்டது இது ஒன்றுதான். -அப்பா அப்பொழுதெல்லாம் உங்களுக்கு எப்படியிருந்தது?


அப்பாவுடன் நான் செலவிட்ட நேரங்கள் பல மறக்க முடியாதவை. எந்த வாகன வசதியும் அற்ற காலங்களில் இவரது சைக்கிள் bar இல் அமர்ந்து போகும் வாய்ப்பு எனக்குத்தான் அதிகம் (சிறிய மகள் என்பதால்) அப்பொழுதெல்லாம் சிறிய அசைவுகளிற்கும் அவர் கூறிய பௌதீகவியல் விளக்கங்கள் எனக்கு அக்காலத்தில் மலைப்பாக இருந்தன என்பது உண்மை. போகும்போது கண்ணாலும் பார்க்க முடியாத சூரியன் திரும்பி வரும் பொழுது தங்கத்தட்டாக நேராகப்

பார்க்கக்கூடியதாக இருந்தது ஏன்? அதன் விளக்கம் இன்றும் எனக்கு மறக்காதுள்ளது.

இவற்றையெல்லாம் தவிர்த்தால் நானோ எனது சாகோதரரோ சகோதரியோ முறையாக இவரிடம் கற்ற நாட்கள் விரல் விட்டு எண்ணத் தக்கவை என நினைக்கிறேன். இவர் அருகே பாடப்புத்தகத்துடன் அரைமணி நேரத்திற்கு மேலாக நான் இருந்தது ஒரே ஒரு நாள். தரம் எட்டுப் படிக்கும் பொழுது காய்ச்சல் காரணமாக நான்கு நாட்கள் நான் பாடசாலை செல்ல முடியாமல் போனது. "என்ன பாடம்" என்றுகேட்டார் கூறினேன். "வட்டம் என்றால் என்ன?" என்று கேட்டார். நான் எந்த மறுமொழியும் கூறவில்லை. அன்று அவர் வரைவிலக்கணம் கூறி விளங்கவைத்த அந்த நாள்தான் முதலும் கடைசியும் அவரிடம் முறையாக நான் கற்றது.

அவர் எமக்கு விட்டுச் சென்றவை நூறு வீதம் சரியானவையா என நான் ஒரு பொழுதும் மறுபரிசீலனை செய்வதில்லை. அரங்கத்தில் "god father" என்பார்கள் அவரது மாணாக்கர்களும் பலர் அவரைப்பின் பற்றியது உண்டு. "எதுவும் உன் மனதிற்கு நூறுவீதம் சரியெனப்பட்டால் தயங்காமல் செய்" "மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பது தேவையற்றது" "பிழையென்றால் பிழைதான். அதைச் சுட்டிக்காட்டப் பயப்படாதே உனது பிழையை ஏற்றுக்கொள்" இவையெல்லாம் அவரிடமிருந்துதான் கற்றுக்கொண்டவை. அவரது இந்த அர்த்தமான வாழ்க்கைக்குப் பக்கபலமாக எனது அம்மா சரிசமமாக, இன்னும் அதற்கும் மேலாக ஆதரவை வழங்கியமை இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த உதவியிருக் கலாம்.

"இன்று அவர் எம்மருகே இல்லை" - அதை இன்னும் ஏற்கும் மனநிலையில் நாமெல்லாம் இல்லை. இதை denial என்பார்கள். வீடு நிறைந்த புத்தகங்கள். இறந்த அன்று காலையில் தீர்த்து முடிக்கப்பட்ட நுண்கணித வினாத்துண்டு. பாதியில் நிறுத்தப்பட்டிருக்கும் காரைக்குறிச்சி இசைத்தட்டு. அவருடன் பகிர்ந்து கொண்ட காலங்களை ஆற்றாமையுடன் கூறித்தவிக்கும் அவரது நண்பர்களும் மாணவர்களும் எல்லோருமே அவரை நினைவுபடுத்துகின்ற பொழுதும் ஏனோ என் மனம் சொல்கிறது 'You lost your Encyclopedia'.



உண்மைகள்கூறி இனியன செய்ய உறவினரோடு உலவிடும் காட்சி



கணிதத் தொண்டனுக்குக் கைகொடுத்த தொண்டன்
கடைசிவரை நாய்போலக் காத்துவந்த அன்பன்




அன்பை ஊட்டி ஆளாக்கும் விந்தை



வீட்டுமுற்றத்தில் விளையாட்டுப் பேரருடன்

Thatha,

You were the best grandpa in the world.
You were very kind and thoughtful. I really love you!
You did a lot of things for everyone. You were
peaceful and you never got mad at us.

You taught me a lot of maths. I will
never forget the way you explained me
place values. It was a bonding experience.

You were a very good teacher!

We are very sad that you are not with us
anymore. I miss you so much, but your
memories will always be with me.
I love you so much Thatha!

From your loving grandson Shyam.

# Thatha,

You were the best grandpa in the world. You were very kind and thoughtful. I really love you. You did a lot of things for everyone. You were always peaceful and you never got mad at us.

You taught me a lot of maths. I never forgot the way you explained me place values, it was a bonding experience. you were a very good teacher. We are very sad that you are not with us anymore. I miss you so much, but your memories will be always with me. I love you so much Thatha!
from your loving grandson Shyam.

# பல தீபங்களை ஒளிர வைத்த ஒளிவிளக்கு அணைந்து விட்டது

(அன்புத் தம்பி மகாதேவன் குடும்பம்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, தனக்கென ஒரு வழிவகுத்து, என் நிலையிலுள்ள மாணவர்களையும் கல்வி புகட்டி ஒரு நல்ல நிலையில் உயர்த்திவைத்த ஆசான் தில்லையம்பலம் எங்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டு விண்ணகம் ஏகிவிட்டார். அவர் மறைவை எவராலும் ஈடு செய்ய முடியாது. அவர் மறைந்துவிட்டாலும், அவரது நினைவுகள் என்றுமே எங்கள் மனதை விட்டகலாது. அவை பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும்.

அந்த நாள் ஞாபகம், 1954ம் ஆண்டு உடுப்பிட்டி அ.மி கல்லூரியில் 4ம் பருவத்தில், தில்லையண்ணா, என்னைச் சேர்த்தார். அன்று முதல் A/L வரை அவருடனேயே இருந்து கல்வி கற்றேன். எனது கல்வி முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர், அவர். என் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும் துணைபுரிந்தார். பின் நான் வேறு இடங்களில் வேலை நிமித்தம் சென்று வீடு திரும்பும்போது அவரைப் போய்ப்பார்த்துப் பல மணி நேரம் அவருடன் அளவளாவி வருவேன். இனிமேல் யாருடன் கதைப்பேன். அவரை இழந்துவிட்டோம். ஆனால், அவர் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.


அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றேன்.



ஞானபண்டித இயலரசு முத்துவேலு பண்டிதர் அவர்களுடன்
கணிதம் ஒருபால் தமிழ் ஒருபால்



அன்புடை மனைவியின் அருகினில் நிற்கும்
பண்புடையாளரின் பண்பாட்டுத் தோற்றம்



கணித நாயகனுக்கு அணிசெய்த மணிவிழா



மைத்துனர் தம்மொடு மகிழ்ந்திடும் கோலம்

# புகழொடு தோன்றியவர்

(திரு. ப. வல்லிபுரநாதன் - மைத்துனன்)

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற குறளிற்கிணங்கத் தன்னையே தேய்த்து நறுமணம் பரப்பும் சந்தனக்கட்டை போலத் தன் சுகத்தையும் பாராது தன்னை நாடிவரும் மாணவருக்குக் கல்வி கற்பித்த அமரர் தில்லையம்பலம் அவர்கள் பலரும் அறிய ஒரு புகழ்பெற்ற கணித ஆசிரியராக வாழ்ந்தவர். கற்பித்தலில் வல்லவராகத் திகழ்ந்தாலும் பெருமையோ ஆடம்பரமோ இல்லாமல் ஒரு எளிமையான மனிதராக வாழ்ந்தவர். நல்ல குணமும் தெளிந்த சிந்தனையும் தியாக மனப்பான்மையும் கொண்டவராக இறுதிவரை வாழ்ந்தவர். சிறந்த ஆசிரியருக்குத் தேவையான பொறுமை, நேர்மை, தியாக மனப்பான்மை, ஆகிய பண்புகள் அவரிடம் காணப்பட்டன. அமரர் தில்லையம்பலம் அவர்களின் திறமையை முதலிலேயே அறிந்து கல்வி மந்திரி அவரைக் கம்பளை சாகிராக் கல்லூரியில் கடமையாற்றத் தேர்ந்தெடுத்தார். அங்கு சிலகாலம் கடமையாற்றியபின் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் பெயர் பெற்ற ஆசிரியராகத் திகழ்ந்தபின், உதவி அதிபராகவும் பணிபுரிந்தார். வடமராட்சியில் இருந்துதித்த பல பொறியியலாளர்கள் இவரிடம் கணிதம் கற்றவர்களேயாவர். இதன் பின்னர் இவர் அங்குள்ள பழைய மாணவர் சங்கத் தலைவராக இறக்கும்வரை பணியாற் றினார்.

பாடசாலை மட்டுமல்லாமல் சமூகத்தில் நடைபெறும் எல்லா நிகழ்வுகளிலும் பங்குபற்ற இவர் தவறியதில்லை. தன்னை நாடிவரும் மாணவர்க்கு ஐயம்நீக்கி மனம் கோணாது தன்னாலியன்றவரை பாடத்தை விளக்குவார். அவரின் மறைவு மாணவ சமுதாயத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

மாணவர் மட்டுமல்லாமல் மற்றவர்க்கும் தன்னாலியன்றதைச் செய்யமுயலுவார். மற்றவரின் துன்பத்தைக் கண்டு துவண்டு போவார்.

மறைந்த அமரர் தில்லையம்பலம் அவர்கள் பாடசாலையிலும் சமூகத்திலும் மட்டுமல்லாமல் வீட்டிலும் ஒரு கடமைதவறாத கணவனாகவும் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட தந்தையாகவும் திகழ்ந்தார்.

திருவாதணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து தில்லையம்பலம் அவர்கள் எனது பேரன்பிற்கும் பெருமதிப்புக்கும் உரிய மைத்துனர் ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

# சின்னையா

(திருமதி தாரணி செல்வநேசன் - பெறாமகள்)

நான் எனது சின்னையாவைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், அவர் வாழ்க்கை எங்கள் குடும்பத்தில் ஒருவராக இணைந்ததில் இருந்து தொடங்கவேண்டும். நான் 5ம் வகுப்புப் படிக்கும் போது, அவரின் திருமணம் நடந்தது. பொலிகண்டிக் கோவிலில் வடக்குப் புறமாக அமைந்துள்ள முருகன் சந்ததியில் பூஜை முடித்து விட்டு, என்னை 750 பஸ் செல்லும் பாதையில் உள்ள புறாப்பொறுக்கியில் உள்ள என் பெரியம்மாவின் வீட்டில் மாலை 3மணி போல் இறக்கிவிட்டு, கம்பொல என்னும் இடம் நோக்கிச் சின்னம்மாவுடன் சென்றது இன்னமும் என் கண்முன் நிற்கின் றது. சின்னையா கம்பொல Zahira college இல் ஆசிரியராக வேலை செய்யும் நாட்களில், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை, அங்கிருந்து தபால் புகையிரதத்தில் பயணம் செய்து, சனிக்கிழமை உடுப்பிட்டி வந்து சேர்வார். மீண்டும் ஞாயிறு திரும்பிச் சென்றுவிடுவார். அவர் தாம் பெற்ற திறனை வளரும் இளம் மாணவ சமுதாயம் பெறும் வகையில் அயர்வின்றிப் போதிப்பதில் ஈடுபட்டார். ஒவ்வொரு சனி, ஞாயிறுக்கிழமை களிலும் பல மாணவர்கள் அவரிடம் தனிப்பட்ட முறையில் கல்வி கற்றுச் செல்வார்கள்.

நான் ஏழாம் வகுப்பில் படிக்கும் போது அவரின் மூத்த புதல்வர் ராஜ்குமார் பிறந்தார். நான் கம்பொல போய்க் குழந்தையைப் பார்த்ததும் அங்கு என்னைப் பாசத்தோடு மிகக் கவனமாகப் பராமரித்து வழியனுப்பி வைத்ததும் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக நிற்கின்றது. அவர் தம் வாழ்வில் ராஜ்குமார், வேணுகா, பானு என முத்தான மூன்று குழந்தைச் செல்வங்களைப் பெற்று, அவர்களைக் கல்விமான்களாக, பண்புள்ளவர் களாகச் சமுதாயத்தில் மிக உயர்நிலையைப் பெற வைத்தார்.

சின்னையா மீண்டும் இடமாற்றம் பெற்று உடுப்பிட்டி திரும்பிய போது அவரிடம் பௌதீகவியல் பாடத்தைக் கற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. அவர் எனக்கு நல்லாசானாக, ஒரு நல்ல வழிகாட்டியாக, ஒரு நல்ல நண்பனாக என்றும் விளங்கினார். நான் என்

குறைகளை மனம் திறந்து கூறும் பொழுதெல்லாம் என்னைத் தேற்றிப் புத்திமதி கூறும் பாசமுள்ள தந்தையாக, என் உள்ளத்தில் என்றும் குடி கொண்டிருந்தார்.

2011ம் ஆண்டு நான் இலங்கை சென்றபோது அவரைச் சந்தித்தேன். பின்னர் நான் கனடா வரும்போது என்னைக் கட்டியணைத்து உச்சிமுகர்ந்து அறிவுரைகள் கூறி மனம் கலங்கி என்னை வழியனுப்பி வைத்தார். அதுவே என் இறுதிச் சந்தர்ப்பமாகிவிட்டாலும்கூட, நான் கனடாவிலிருந்து அவருடன் தொலைபேசி மூலம் உரையாடக்கூடியதாக இருந்தது.

2014ம் ஆண்டு பங்குனி மாதம் 26ம் திகதி அவரது 75ஆவது பிறந்த நாளன்று நான் அவரோடு வாழ்த்துக்கூறி உரையாடினேன். அவர் ஒரு குழந்தையைப்போல் மிகச்சந்தோசமாக என்னுடன் உரையாடி னார். நான் மீண்டும் மறுநாள் அவருடன் உரையாடினேன். அதுதான் நான் அவருடன் இறுதியாக உரையாடியது. இவ்வளவு சீக்கிரமாக அவரது அன்பு, அறிவு, ஆதரவு எல்லாவற்றையுமே ஒரு நொடியில் இழந்து விடுவேன் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. என் பாசமிகு சின்னையாவின் நினைவுகள் அவர் இல்லையே என்ற ஏக்கத்தைக் கொடுத்தாலுங்கூட, என் இதயம் உள்ளவரை என்னுடன் நிலை கொண்டி ருக்கும். அவரது ஆத்மசாந்திக்காக என்றும் இறைவனை வேண்டி நிற்கிறேன்.

# நினைவில் நிறைந்தீர்

(திரு. மு. வீரகுலசிங்கம் - மைத்துனர்)

கால ஓட்டத்தில் நம் உறவினராகி,
கலியாண பந்தத்தில் இணைந்து
நண்பராய், அன்பராய், உறவினராய்
உரிமையுடன் உறவை இணைத்தீர்

இன்சொல் பேசி இனிமையுடன்
இன்முகம் காட்டி உபசரிக்கும் உறவு
அன்பு, பண்பு, அறிவு, அனுபவ
ஆற்றல் நிறைந்த ஆளுமைக் கோலம்

அறிவுத்திறனும் பொறுமையுமுடையாய்
கல்வியைக் கருத்துடன் பயிற்றுவித்தாய்
வந்தாரை வரவேற்கும் பாங்குடையாய்
உபசரித்து ஓம்பும் பண்புடையாய்

மரணம் வெறும் உடலுக்கு மட்டுமே
மனங்களில் நீவிர் எம்முடன் உள்ளீர்
மருமகன் மாமன் உறவினர் மேன்மை
மனங் கொண்ட பேரர்கள் மனங்களில் வாழ்வீர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழவழி காட்டிய பெரியோனே
காலனின் கணக்குப்படி நாம் கலங்கி நிற்க
கடவுளிடம் அடைக்கலம் பெற்றாயோ?

மனைவி, மக்கள், மனம் அமைதி பெற
உன் ஆத்மா சாந்தி அடைக!

ஓம் சாந்தி!!!

# மாலைவருமுன் மறைந்தனையோ?

(திரு ஐ.சி. அம்பிகாவரன் - நண்பன் - கனடா)

பூவிலும் மெல்லியபொன் இதயம் என் நண்பன் தில்லைக்கு அந்தப் பூவைப் பறித்துக்கொண்டவனும் தில்லையம்பலத்தானா?

அதிகாலைப் பொழுதை அமெரிக்கன் மிஷனில் கழித்தாய். பின்னர் யாழ் இந்துக் கல்லூரி விடுதியில் என்னையும் உன் நண்பனாகச் சேர்த்தாய். உன் உள்ளத்தூய்மை, விசுவாசம், நேர்மை, மற்றவருக்கு உதவும் மனப்பான்மை என்பவற்றால் என்னை ஆட்கொண்டாய்.

*உன் அன்புக்கு நான் அடிமை.*
*உன் பண்புக்கு நான் பணிவு.*
*உமது நட்பு - அது நட்புக்கு இலக்கணம்.*
*பிரதிபலனை எதிர்பாராத நிபந்தனையற்ற நட்பு*
*அகம் நகும் நட்பு*
*உடுக்கை இழந்தவன் கை போல்*
*வேண்டிய நேரத்தில், தாமதிக்காது*
*மானம் காக்கும், இன்னல் போக்கும் நட்பு.*

நண்பா!

யாருக்கும் உதவி செய்ய எண்ணி பின் மனச்சஞ்சலப்பட்டதை யும் யான் அறிவேன். ஆறுதல் கூறியபின் கண்டித்துமிருக்கிறேன். முகநக நட்பு அது நட்பல்ல..... என்பதனால், உமக்குப் பல நண்பர்கள் என்பதை அறிவேன். எங்கள் குழுவில் நாம் ஐவர். உமது நெருங்கிய நண்பர்களாய் இருந்தோம். வேறுபாடின்றிப் பழகினோம். சுகதுக்கம் யாவற்றையும் பகிர்ந்து கொண்டோம். அந்த நாட்களை நினைத்துப் பார்க்கும்போது ஆறுமுகம், உமா, பாலசிங்கம், வேலுப்பிள்ளை மற்றும் நண்பர்கள் பலர் நினைவுக்கு வருகின்றார்கள். கூட்டங்கள், திருவிழாக்கள், திரைப்படங்கள் ஒன்றாக அனுபவித்தோம். மூத்தநயினார் கோயில் வீதியில் படுத்திருந்து கதை கதையாய்ப் பேசினோம். அந்த நாட்கள் இனி என்றும் வாராது. என் கண்கள் குளமாகின்றன. பேராதனைப் பட்டப்படிப்புக் காலத்தில்...

ஆயினும் விடுதலைக் காலங்களில் முழுமையான ஒன்று கூடலும் சுவாரஸ்யமான சொல்லாடுகளமும். கருத்துக்கள் மோதும், வெளிச்சங்கள் மின்னும் எமது கலந்துரையாடலில். கணிதம் உனது உயிர். பௌதிகவியல் உனது மூச்சு. அவற்றை நீ படிக்கும் போதும் படிப்பிக்கும் பொழுதும் ரசித்து, ருசிப்பாய். அதைப் பார்க்கும் போதே என்னையும் படிக்கத்தூண்டும். உன் ஆர்வத்தாலும் ஆற்றலாலும் BSCஇல் முதலாம் பிரிவில் சித்தியெய்தியமை எமக்கும் பெருமைதானே நண்பா!

*நீ ஒரு சிறந்த ஆசான்*
*அறிவு ஊட்டுவது மட்டுமல்ல- அன்பாலும்*
*ஆட்கொண்டு விடுவாய்.*

உன் பின்னால் பாரிய மாணவர் குழாமையே உருவாக்கினாய். அவ்வப்பொழுது நீ சிந்திய "வேர்வை"க்கும் உமது மாணவரின் வாழ்வுக்கான முன்னேற்றம் வேர் வைக்கும் என்று நம்பினாய். அது பலித்தது. தானத்தில் சிறந்த தானம் அறியாமை என்னும் இருளைப் போக்கி "அறிவு" என்ற ஒளியை ஊட்டும் அறிவுத்தானமே என்று கற்றுணர்ந்தோர் கூறுவர். அந்தத் தானம் வழங்குவதில் நீ கர்ணன்-செஞ்சோற்றுக்கடன் தீர்த்த நண்பன் என்ற அர்த்தத்தில் அல்ல. வஞ்சனையால் வீழ்ந்து உயிர் போகும் தறுவாயிலும் "இல்லை" என்னாது வழங்கினானே தன் வாழ்நாட் புண்ணியத்தை - அதுபோல நீயும் உன் "இதயத் தாக்கத்தை" (Heart attack) பொருட்படுத்தாது அறிவூட்டும் உன் இதய தாகத்தைப் பொருட்டாக மதித்துச் செயற்பட்டாயே அதற்காக நீ ஒரு சிறந்த நிருவாகியும் கூட. குடும்பத் தலைவனாக மட்டுமல்ல, அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபராக மட்டுமல்ல, உனது நண்பர் குழாமையே குறைவுபடாது நிருவகிக்கும் திறன் உனக்கு மட்டுமே உரியது. அம்மாவின் அன்பையோ, அரவணைப்பையோ அறியாத உன் பூ முகத்தில், புன்னகை தவழவிட, உனது வாழ்க்கையைப் புகழோடு மிளிர விட, தியாகங்கள் பல செய்து ஒரே சிந்தனையாக நின்று உன்னை வழி நடத்திய உனது தந்தையாரின் முகம் என் முன்னே நிற்கிறது. உன்னை ஆளாக்க வேண்டுமென்ற ஆவலும், தவிப்பும், ஏக்கமும் அவரது

ஒவ்வொரு வார்த்தையிலும் பிரதிபலிப்பதை நான் இந்த வேளை நினைவு கூருகின்றேன். அந்த ஆத்மாவுக்கும் ஆறுதல் கூறவேண்டும் போல உணருகின்றேன். மீண்டும் என்கண்கள் கலங்குகின்றன. நீ மணம் புரிந்தவரோ உனது மனம் புரிந்தவர். தாயில்லாக் குறையையும் சேர்த்து உமது அன்பு மனையாளாக வாழ்பவர். ஆதரவும், அன்பும் என்றும் குறையாதவர். உனது செல்வங்களோ உங்கள் நல்ல இதயங்களிலிருந்து மலர்ந்த அன்பும், பண்பும் செறிந்த மதித்தற்கரிய மாணிக்கங்கள். இறுதி நாட்களில் பேரப்பிள்ளைகளின் மழலையும் அனுபவித்து இருவீரும் இன்புற்றிருந்தீர்கள். நீ கொடுத்து வைத்தவன்! அதனால் தானோ என்னவோ அந்த ஆண்டவனே உன்னைக் கண்ணூறு செய்தான். இதயச்சிகிச்சை நிபுணராய் மகளிருக்க, அவருக்கும் கண்ணாமூச்சி காட்டிவிட்டு அந்தக் கடவுள் அந்திப் பொழுதிலேயே உன்னைப் பறித்துக் கொண்டானோ? இன்னும் மாலையே ஆகவில்லையே?

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது வாழ்வென்றால் போராடும் போர்க்களமே" பூக்களே! உங்களைப் பார்த்து முகர்ந்து மகிழாத மக்கள் மாக்களே! மற்றவருக்கு அது மகிழும் கலை. ஆனால் உங்களுடையதோ நெகிழும் கலை. காலையில் அரும்பி மொட்டவிழந்து மலர்களாகி உங்கள் அழகுத் தோற்றத்தைக் காட்டி, மயக்கும் நறுநாற்றத்தைப் பரப்பி, உங்கள் குலத்தைச் செழிக்க வைக்க, வந்தாரை வரவேற்று அமுதும் ஊட்டி மணவினையும் முடித்து, கடமை தீர்ந்ததோ என்னவோ, மாலையில் மறைந்து போகிறீர்களே! உங்கள் வேதனை யாருக்குப் புரியும். அதையும் விட வேதனை- நீங்கள் மலர்ந்ததும், மலராததுமாய் இருக்க, அந்த மேலவனைப் பூஜிக்கவோ அன்றி மேலிடத்தாரை யாசிக்கவோ நீங்கள் பறிக்கப்படுகிறீர்களே, உங்கள் வேதனையை யார் உணர்வார்கள்? எத்தனை போராட்டம் உங்கள் வாழ்க்கையில்? எங்கள் தில்லையையும் பறித்துக் கொண்டாயே கடவுளே! கண்ணீர்விட்டுக் கதறிக் கேட்கிறேன். ஆண்டவரே என் நண்பனை உனது திருப்பாதங்களோடு அணைப்பாயாக.! உன் கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலம்! ஆண்டவரே அன்னாரின் அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு, தில்லையின் இழப்பைத் தாங்கக்கூடிய சக்தியையும் வல்லமையையும் வழங்குவாயாக.

# புனிதமான ஆசிரியப்பணி செய்த இயங்கியல்வாதி

(க. கந்தசாமி - நண்பர் -
(முன்னாள் வடக்கு-கிழக்குக் கல்விப் பணிப்பாளர்)

*குருவே சிவமெனக் கூறினன் நந்தி*
*குருவே சிவமென்பது குறித்தோரார்*
*குருவே சிவனுமாய்க்கோனுமாய் நிற்கும்*
*குருவே உரையுணர்வற்றதோர் கோவே.*

என்ற திருமந்திரக் கூற்றுக்கு ஏற்ப எனது நண்பன் தில்லையம்பலம் தன்னைச் சூழ இருந்த கூட்டங்களுக்கெல்லாம் குருவாய் நின்றவர். அவர்தான் வாழ்ந்த ஊர், சூழஉள்ள ஊர், மலையகம், பேராதனைப் பல்கலைக்கழகச் சூழல் எல்லாம் தன் குரு வித்துவத்தை அனைவரும் பயன்பெற வைத்தவர். அடக்கம், பண்பு, பணிவு, வாஞ்சை கொண்டவர். அஞ்ஞானம் என்ற இருள் அறுத்து மெய்ஞானம் என்ற விஞ்ஞானம் போதித்தவர். இல்லாப் பிள்ளைகளுக்கு இரங்கிய தந்தையானவர்.

எமது சமூகம் அதனது வளர்ச்சிக் கட்டங்களில் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் கல்வி அடிப்படையானது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்த முற்போக்குக் குணம் கொண்ட தமிழ் மாணவர்கள் சிலருடன் தில்லையம்பலமும் சேர்ந்து மலையகத்துத் தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டினார்.

தன்னைச் சூழ உள்ள மாணவருக்குத் தனது ஊருக்கும் அப்பால் சென்றுகல்வியூட்டலைச்செய்த தில்லையம்பலத்திற்கு நண்பர்கள் ஏராளம். 1962களில் அவர் பல்கலைக்கழகத்தைவிட்டு வேலை தேடிய காலத்தில் மாலையில் அவரது ரியூஷன் நடக்கும் பள்ளியாக அப்பா பள்ளிக்கூடம் அயலவர்க்கு உதவியது. அவர் வடக்கு அறியப்பட்ட பிரதான ரியூஷன் புள்ளி.

எனது அருமை நண்பன் அம்பிகாவரன் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் படித்த சமயம் தில்லையம்பலம் அவரின் உற்ற நண்பனானார். இதனால் தில்லையம்பலமும் எனக்கு அறிமுகப்படுத் தப்பட்டு பின் எனக்கு அன்னியோன்யமான நண்பனானார். தில்லைக்குச்

சைக்கிள் ஓட முடியவில்லை. இதனால் நானும் அம்பிகாவரனும் சனி, ஞாயிறு, விடுதலை நாட்களில் அவரிடம் போவோம். அவருடன் எனது நெருக்கம் கூடிய காரணம் அவர் பல்கலைக்கழகத்தில் ஒரே காலத்தில் படித்ததனாலாகும். அவரது தாய் தில்லையின் குழந்தைப் பருவத்தி லேயே இறந்துவிட்டதால் தந்தையார் மறுமணம் செய்யாமல் அவரை வளர்த்தார். இதனால் அவர் தந்தையாரும் வேறு சகோதரர்கள் இல்லாத தில்லையையும் என்னையும் இணைச்சதோதரர் போலக் கணித்து எங்களுடன் வாஞ்சையுடன் இருந்தார். அவர் சைக்கிளில் எனது வீட்டுக்கும் வந்துபோய், குடும்ப ஐக்கியத்தைப் பேணினார். நீண்ட பெரும் மாங்கன்று ஒன்றைத் தில்லையின் தந்தையார் தன் சைக்கிள் கரியரில் வைத்து உடுப்பிட்டியிலிருந்து கொண்டு வந்து தந்தார். அவர் தந்த மாங்கன்று எங்கள் வீட்டில் காய்த்துக் கொண்டிருப்பது அவருடைய தந்தையார் நினைவை நீங்காது என்னுடன் வைத்திருக்கின்றது.

பல்கலைக்கழகங்களில் வாழ்ந்த காலத்தில் தில்லை எனக்கு ஒரு வருடம் முன்பாகச் சேர்ந்தவர். அவர் கணிதத்தில் சூரர் ஆவார். சகவகுப்பு மாணவருக்கும் எனக்கும் கணிதம் சொல்லிக் கொடுத்தவர். எல்லா வருடத் தமிழ், முஸ்லீம், சிங்கள மாணவர்கள் எல்லோரும் தில்லையிடம் இலவசமாகவேதான் பாடம் பெற்றுக் கொண்டனர். அவருக்கு எங்கே சென்றாலும் சிறப்புத்தான். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு அன்றோ! பல்கலைக்கழகத்தில் படித்த நேரத்தில்கூடப் பேரதேனியா சென்று அப்பகுதியிலுள்ள புறக்கணிக் கப்பட்ட தோட்டத்து லயங்களில் வாழும் பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டிக் கல்விப் பணியைச் செய்தவர்களில் தில்லையம்பலமும் ஒருவர். “ஊக்கமது கைவிடேல்” என்பது அவரது தாரகமந்திரமாக இருந்தது.

நான் வடகிழக்குக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்திலும் வடக்கில் கல்வித் திணைக்களத்தில் இருந்த காலத்திலும் தமிழ்ச் சமூகத்தின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டி எனக்குப் பல ஆலோசனைகளை முன்வைத்துக் கல்வி ஈடேற்றத்திற்காகவே உழைத்தவர். அவரது துணைவியும் பிள்ளைகளும் அவரைப் பெயரும் புகழுடன் தொடர்ந்து வைத்திருக்கப் புலமைப்பரிசில் நிதியம் போன்றவற்றைப் பல்கலைக்கழகத்திலோ மலையகத்திலோ அல்லது அவரது கிராமத்திலோ ஆரம்பித்துக் கல்விக்கான பணியைத் தொடர்வார் கள் என்ற ஆதங்கம் எனக்குஉண்டு.

# MY DEAREST FRIEND AND GOOD SAMARITAN

(Mr.S.M.Mahalingam - Friend, Canada)

When I sat down to pen this piece of appreciation about my dearest friend Thillai my conscious refused to believe that Thillai is not amongst us.

I came to know him while we were in Form I (grade 6) at Udupiddy A M College,but became very close friends when we were in J S C (grade 8).He was an unassuming character and would never hurt the feelings of others. What I appreciated about Thillai was that whatever he learned in MATHEMATICS and PHYSICS he mastered them, so that we could approach him to clear our doubts in these two subjects because of his pleasant nature to help anyone who approached for help. Even now while I am in Canada whenever I get struck with any problem in Mathematics or Physics I used to contact Thillai over the phone and present the problems to him. He would always solve the problem either on the same day or the next day and called me back.

His moto was to help others and keep them happy. After I left Sri Lanka whenever I came back on holiday I never failed to visit him and used to have a very long chat. During this chat he used talk proudly about his Son and the two daughters. I am sure you all will live up to appa's expectation.

To Rajes I know ,Thillai would have loved you dearly and he will always watch over you, and I am sure you will find solace in knowing that you will see Thillai in your Children.

As a person who has lost a close loved one be assured that as time passes the loneliness will slowly fade and it will be replaced by the wonderful memories that made your husband so special to you and the rest of us.

Finally I wish to quote from Bhagavad Gita for the bereaved family to take solace

"Why are you crying?
What did you bring to loose and to mourn?"

Good-bye Thillai. I will miss you dearly.

# எல்லோரும் போற்றிய ஆசிரியர் எனது மாணவர் தில்லையம்பலம்

(திரு. இ.பஞ்சநாதன் - அமரரின் ஆசிரியர்)

கல்விச் சமூகத்துக்குக் கிடைத்த ஓர் அரிய பேறாகவும், உடுப்பிட்டிக்கும் மாணவ சமூகத்துக்கும் கிடைத்த ஒரு சிறந்த கல்விமானாகவும் வாழ்ந்தவர் ஆசிரியர் தில்லையம்பலம். அதிசிறந்த மாணவராகவும், ஆசிரியராகவும் அதிபராகவும் உடுப்பட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியை அலங்கரித்தவர் ஆசிரியர் தில்லையம்பலம்.

மலர்ந்த முகமும், மதிப்பான தோற்றமும், அடக்கமுதலிய அமைதியான பண்புகளும் நிறைந்த மாமனிதர் அவர். வகுப்பில் கணிதத்தை ஒழுங்காகக் கற்றார். வகுப்பில் யாரையும் கணிதத்தில் குறையவிடாமல் கவனிப்பார். வகுப்பில் கற்கும்போதே, மாணவராக இருந்தபோதே அவரை ஒரு நல்லாசிரியராகக் கண்டேன். அவர் படித்த வகுப்பில் எல்லோரையும் திறமை பெற்றுச்சிறப்பாக விளங்கவைத்த படியால் அவரது வாழ்க்கையும் திறம்பட அமைந்தது.

தனது கல்லூரிக்கும் மாணவ சமூகத்துக்கும் சிறந்த கணித வழிகாட்டியாக அமைந்தது மட்டமல்லாமல் கணிதத்தில் போதிய திறமை பெறாத வெளிமாவட்டங்களிலும் ஆசிரியராகச் சிலகாலம் கடமையாற்றி அங்கும் கணிதத்தில் சிறந்த மாணவர்களையும் உருவாக்கினார். கணிதத்தில் மட்டமல்ல நிஜவாழ்விலும் அவர் யாவராலும் போற்றி மதிக்கப்படும் மாமனிதராகவும் வாழ்ந்தார். இறையருளால் அவருக்கு எல்லாச்செல்வங்களும் சிறப்பாகக் கிடைத்தன. நல்லதொரு கணவனாகவும் தந்தையா கவும் வாழ்ந்தார். அவரது மனைவியும் (அவரும் எனது மாணவி தான்) ஒரு நல்லாசிரியை. இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்ட கல்விச்சிறப்பும் நிரம்பிய ஆற்றல்களும் மிக்க பிள்ளைகளுக்குப் பொருத்தமும் நற்பண்புகளும் உள்ள துணைகளும் கிடைத்தனர். கடைசிக்காலத்தில் ஓய்வாக மகிழ்ந்து விளையாட

பிள்ளைகளின் மழலைச்செல்வங்களும் கிடைத்தனர். அவர் உடுப்பிட்டியில் புகழ்பூத்த குடும்பத்து அங்கத்தவர். மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். எல்லோராலும் நன்கு மதித்து போற்றப்படும் ஒருவராக இறுதி வரை வாழ்ந்தார்.

இறைவனின் அன்பான அழைப்பை ஏற்று எம்மைவிட்டுப் பிரிந்துள்ளார். ஆசிரியர் தில்லையம்பலம் இறக்கவில்லை. அவருடைய கூடு தான் பிரிந்து சென்றுள்ளது அவர் என்றும் அன்பர்களின் மனங்களில் நிலைத்து வாழ்கிறார், வாழ்வார்.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

அவருடைய மனைவி, மக்கள், அவர்களைச் சேர்ந்த குடும்பத்தினர் ஆசைக்குழந்தைகள், யாவரும் சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# செந்நெறியாளன்

(திரு. சு.கிருஸ்ணகுமார் - அதிபர் யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

*"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் தோன்றாமை நன்று"*, என்ற வான்புகழும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்கத் தோன்றி, புகழோடு வாழ்ந்து இறவாப் புகழ் பெற்றவர் அமரர் சரவணமுத்து தில்லையம்பலம் அவர்கள். ஆரம்பக்கல்வியை யா/தாமோதரா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்றார். அன்னார் கல்வி கற்கும் காலத்திலும் கற்பித்த ஆசான்களால் பாராட்டப்பட்டவர்.

அவர்கள் 01.01.1969 இல் கணித உதவி ஆசிரியராக நு/சாந்த யோசேப் பாடசாலையில் (மஸ்கெலியாவில்) முதல் நியமனம் பெற்றார். சிறிது காலத்தின் பின் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சியைப் பெற்று க/கம்பளை சாகிராக் கல்லூரியில் 01.01.1972 தொடக்கம் 05.06.1978 வரை ஆசிரியப் பணியை மேற்கொண்டார்.

பின்னர் 06.06.1978 இல் இடமாற்றம் பெற்று யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தனது ஆசிரியப் பணியைச் செவ்வனே தொடர்ந்தார். அவ்வகையில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்குக் கணித பாடத்தைக் கற்பித்துச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்தார். பல பொறியியலாளர்களையும், கணித ஆசான்களையும் உருவாக்கிய பெருமையை பெற்றவர். உதவி அதிபராகக் கல்லூரியில் தன் கடமையைப் புரிந்து கல்லூரித் தாயின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர். 12.05.1996 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றாலும் தனது கணித பாடக்கற்பித்தலை இறுதி வரைக்கும் செய்து கணித பாடத்தில் இடருற்ற எத்தனையோ மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய பெருமையைப் பெற்றவர்.

*"தக்கார் தகவிலார் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும்"*

என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பித்தவர். அவரது இரு பெண்பிள்ளைகள்

வைத்தியராகவும், ஆண்மகன் பொறியியலாளராகவும் இருக்கின்றார்கள். அது மட்டுமன்றி எத்தனையோ பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள், கல்வியலாளர்கள் என அவரிடம் கற்ற மாணவர்கள் சான்றாகத் திகழ்கின்றார்கள்.

அமரர் சிறந்த பண்பாளன், நேர்மையின் இலக்கணமாக விளங்கியவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைத் தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். அதற்கு எடுத்துக் காட்டாகப் பல நிகழ்வுகளைக் காணலாம். அமரர் அவர்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தாய்ச்சங்கத்தில் உறுப்பினராக, தலைவராக, உபதலைவராக இருந்து நிர்வாகம் சார்ந்த சகல செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். அவ்வப்போது பல காத்தரமான ஆலோசனைகளை வழங்கிப் பாடசாலை அபிவிருத்தியில் தளராத முழுமூச்சுடன் செயற்பட்டுச் சாதனைகளைப் படைத்தார். தனக்கேற்பட்ட நோயையும் பொருட்படுத்தாது இறுதிவரை தளராது கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்தவர்.

அமரர் சரவணமுத்து தில்லையம்பலம் ஆசிரியர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



நீரின்றி அமையாது உலகின் இருப்பு
மாணவர் நலனுக்கு நீரத்தாங்கி திறப்பு



கனடாக் கிளையின் கல்லூரிப் பணிக்கு
காலத்தால் அழியாத சாசனம் திறத்தல்



கல்லூரித் தாயைப் பேணிய சங்கத்தைக்
காலமெலாம் தாங்கிநின்ற கணிதத் தூண்



கல்விக்காய்க் கணிதப் படையொன்று புடைசூழ
கதிரையில் வீற்றிருக்கும் கண்பனிக்கும் காட்சி

# தில்லையம்பல இரகசியம்

(கணிதவியல் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா
பீடாதிபதி - விஞ்ஞானபீடம் - யாழ். பல்கலைக்கழகம்
தலைவர் பழைய - மாணவர் சங்கம் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

தில்லையம்பல இரகசியம் அல்லது சிதம்பர இரகசியம் எனப் பேசப்படுவது எமது வாழ்வின் ஆதார நிலையாக ஒவ்வொருவருக் குள்ளும் மறைபொருளாக இருக்கும் மெய்ப்பொருளைக் குறிக்கும். மக்கள் தில்லை (சிதம்பரம்) சென்று தில்லையம்பலத்தானைத் தரிசித்த பின் சிதம்பர இரகசியம் காணப் பரிவார அறையொன்றின்முன் கூடுவர். அந்தணர் கற்பூரதீபத்தைக் காட்ட அங்கு ஒருவர் காண்பதெல்லாம் ஆகாய வெளியே. சற்று உற்று நோக்கில் சிறிய பொன் இலைகளை யுடைய மெல்லிய வில்வம் இலையைக் காண்பார்.

அமரர் தில்லையம்பலம் மாஸ்டர் அரிய குணங்களைக் கொண்ட ஒரு பண்பாளராக நம்மிடையே வாழ்ந்து போற்றுவதற்குரிய பல சேவைகளைத் தனது குடும்பத்தினருக்கும், உற்றாருக்கும் மாணவ சமுதாயத்திற்கும், உடுப்பிட்டிப் பாடசாலைச் சமுகத்தினருக்கும் ஆற்றி நேரிய சிந்தனையாளராக, கடினமான விடயங்களை எளிதில் புரிந்து கொள்பவராக, வைராக்கியத்துடன் செயற்படுபவராகத் தூய்மையான உள்ளம் கொண்ட ஒரு அரிய மனிதராகக் காணப்பட்டார்.

தில்லையம்பல மாஸ்டர் இவ்வரிய சிறப்புகளுக்குரியவராக இருந்தமையின் உன்னத இரகசியம் அவரது கணிதப்புலமையும் இயல்பான நேரிய சுபாவமும் தான் என்று எண்ணத் தோன்றுகின்றது. ஒரு உண்மையான கணிதவியளாளனின் சிறப்பு அம்சம் பிழையான வழியில் செல்லமாட்டார். கணித நெறியில் ஒருவர் பயிற்றுவிக்கப்படும்போது, ஒரு பிரச்சனையைத் தீர்க்க முற்படுகையில் தீர்வைப்பெற இடர்ப்பட்டாலும் பிழையான முறையில் வைக்கப்படுபடும் தீர்வுகளைக் கஷ்டமின்றிக் கண்டுகொள்வார். While solving problems a Mathematician may encounter numerous difficulties to arrive at the solution but easily recognise wrong solutions put forwarded. இதற்கு ஒத்தாற் போல் உடுப்பிட்டி

அ.மி.கல்லூரியின் நிர்வாகத்திலும் பழைய மாணவர் சங்கத்திலும் பணியாற்றும்போது அவ்வப்போது முன்வைக்கப்படும் பிழையான கருத்துக்களை உடனடியாகப் புரிந்துகொண்டு மறுதலித்து நேர்வழி காட்டத்துணைபுரிந்தார். பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் தில்லையம் பலம் மாஸ்டரின் ஒரு சிறப்பான அம்சம் "பிரச்சனையின் வெளிதோற்றப் பாட்டினை பற்றி அழமான முறையில் மூல காரணங்களுடன் புரிந்து கொள்ளும் ஆற்றல்" ஆகும். இது, இவர் ஒரு சிறந்த கணித ஆசானாக இருந்தமையால் இவர் பெற்ற அனுபவம் ஆகும். ஏனெனில் மாணவர்கட்குக் கணிதத்தினைக் கற்பிக்கும்போது அவர் பயிற்றுவிக்கும் ஒரு கோட்பாடு "by understanding the problem it self half of the problem solved" அதாவது பிரச்சினையைத் தீர்த்தலில் பிரச்சினையைப் புரிந்துகொள்ளுதல் என்பது பிரச்சினைக்கான தீர்வின் அரைப்பகுதியை எட்டியதாகக் கருதப்படும்.

தில்லையம்பலம் மாஸ்டர் மிகுந்த வைராக்கியம் கொண்டவராக வாழ்ந்து தனது கடமைகளை நிறைவேற்றியுள்ளார். வைராக்கியம் கொண்ட ஒருவர் எந்தவொரு கவர்ச்சிகளுக்கும் இடங்கொடுக்காது பற்றுதலின்றி இயல்பாகக் கொண்ட கடமைகளைச் செவ்வனே நிறை வேற்றுவார். வைராக்கிய சிந்தனையும் ஒரு உண்மையான கணித ஆசானின் இயல்பான குணமே. கணிதம் "வைரம்" போன்றது என்பார்கள். வைரத்தை வைரத்தால்தான் வெட்ட முடியும். அவ்வாறன கணிதத்தின் ஒவ்வொரு படியும் வலுவான தர்க்கத்தின் (Logic) அடிப்படையில் தான் அமையும். "Mathematics like a diamond nothing can touch it except logical reasoning" தில்லையம்பலம் மாஸ்டர் தர்க்க முறையில் விவாதித்து மற்றவர்களையும் சிந்திக்கச் செய்து முடிவுகளை எட்டவல்லவராகத் திகழ்ந்தார்.

கடவுள் இந்தப் பிரபஞ்சத்தையும் இயற்கையும் மனிதனையும் படைத்தார். நாம் அறிந்த இறைவனது படைப்புகளில் மனிதப்பிறவி சிறந்த படைப்பாகக் காணப்படுகின்றது. இறைவனின் சிறந்த படைப்பான மனிதன் படைத்த இரு நெறிகளில் இறைவனுக்கு மட்டற்ற பெருமை. அவைதாம் கணிதம் (Mathematics) மற்றும் இசை (Music) இவ்விரு




உயிரென நேசித்த உன்னத கல்லூரியின்
மெய்வல்லுனர் போட்டியின் மேன்மை அதிதியாய்




பழைய மாணவர் பாங்குடன் நிமிர
பாரினில் ஒளியை ஏற்றிடும் ஏற்றம்



புலவர் மணியுடன் பூக்கும் புன்னகையில்
அளவளாவும் ஓர் ஆனந்தத் தோற்றம்



தம் சுற்றம் பேணும் ஒரு தகை சார்ந்த பண்பு

நெறிகளும் உன்னத ஆக்கத்திறன் (Creativity) கொண்டவை. இந்த பிரபஞ்சத்தின் அடிப்படைச் செயற்பாடுகளை ஆராய்ந்த பௌதீகவியல் விஞ்ஞானிகள் அவற்றின் பின்னால் பெரிய கணிதச் செயற்பாடுகள் தொழிற்படுவதாகவும் (Quantum Mechanics) மற்றும் இந்தப் பிரபஞ்சமே ஒரு கணிதப்பிரபஞ்சம் (mathematical universe) என்றும் கூறுகின்றனர்.

இந்த வகையில் கணிதத்தைப் பலருக்கும் சிறப்புறப் போதித்த மேலான ஆசான் தில்லையம்பலத்தினையிட்டு இறைவன் மகிழ்வடைவார். அவரின் மகன் ராஜ்குமார் பொறியியலாளராகவும் இசை வல்லுனராகவும் தன்னை வளர்த்துள்ளார். இசையால் வசமாக இதயம் எது? இறைவனே இசைவடிவம் என்பார்கள். இந்த வகையில் கணிதத்தின் படைப்பாற்றல் கொண்ட தில்லையம்பலம் சேரின் புதல்வன் இசையில் படைப்பாற்றல் உள்ளவராகத் திகழ்வது சாலப்பொருந்தும். நாம் 2M (Mathematics and Music) பற்றி விவாதித்தோம். இது தவிர மனிதனின் வாழ்வின் இன்னுமொரு "M" முக்கியமானது அதுதான் Medicine (மருத்துவம்). இந்தவகையில் தில்லையம்பல மாஸ்டரின் இரு புதல்விகளும் மூத்த மருமகனும் மருத்துவதுறையில் பட்டம் பெற்று, சேவையாற்றி வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

தில்லையம்பல மாஸ்டர் தூய்மையானவர். அவர் கணிதத்தில் வித்தகராகத் திகழ்ந்தார். அதிலும் தூய கணிதத்தில் (Pure Mathematics) சிறந்த புலமையாளராகக் காணப்பட்டார். எந்தவொரு துறைக்கும் "தூய" (Pure) என்ற அடைமொழி பொருந்துவதாக இல்லை. தூய பௌதிகம் தூய பொறியியல் தூய மருத்துவம் என்றவகையில் ஒன்றுமே அமையாது. "தூய கணிதம்" என்பது கணிதத்திற்கே தனிப்பட உரியது. எமது கணித ஆசானும் தூய கணித வல்லுனராக மாத்திரமன்றி மாசற்ற வாழ்க்கை நெறியினை மேற்கொண்டு தூய்மையான உள்ளம் கொண்டவராக இருந்து பலரது மதிப்பையும் பெற்றிருந்தார்.

மனிதன் மீது இறைவனின் நிகரற்ற செல்வாக்கு என்பது நேரம் காலம் வரும்போது உறவுகள் பிரிக்கப்படுதலாகும். இறைவனைக் "கால காலன்" என்று கூறுவர். தில்லையம்பலம் ரீச்சர் ஒரு பதிவிரதை. காலனை

விரட்டிய வைரவர் ஆலயம் முன்பாக நல்ல பக்தி சிரத்தையுடன் இல்லற வாழ்வைக் கைக்கொண்டவர். இதனால்தானோ என்னவோ காலனும் தில்லையம்பலம் மாஸ்டரை அவருடைய இல்லத்தில் அல்லாது பிறிதொரு இடத்தில் வைத்துப் பிரித்தெடுத்துள்ளார்.

தில்லையம்பலம் ரீச்சர் தமிழ் மொழி கற்பிப்பவராக இருந்தமை சாலப்பொருந்தும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பார்கள். சேரும் ரீச்சரும் எமது உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் இரு கண்கள் போல இருந்' எண்ணினையும் எழுத்தினையும் போதித்துப் பல மாணவரின் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றி வைத்தமை நினைவு கூறத்தக் கதாகும்.

உடுப்பிட்டி அ.மி. கல்லூரி பழைய மாணவர் சங்கமும் தில்லையம்பல மாஸ்டரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று பிரிக்க முடியாதன. தில்லையம்பல மாஸ்டரைப் பிரிந்து பழைய மாணவர் சங்கம் கற்றாவை இழந்த கன்று போலக் கதறி அழுகின்றது. அன்னாரின் பேரன்பிற்குரிய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெறச் சிதம்பர நடராஜனைத் துதிக்கின்றோம்.

# அமரர் தில்லையம்பலம்
# கல்வி உலகின் ஒரு சகாப்தம்

(வல்வை ந.அனந்தராஜ், நகரபிதா - வல்வெட்டித்துறை
முன்னாள் அதிபர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

கணிதம் என்றவுடன் அமரர் ச.தில்லையம்பலம் அவர்களை நினைவுகூராது இருக்க முடியாது. அமரர் தில்லையம்பலம் அவர்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு, சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலானது. அவர் தனது கற்பித்தல் அனுபவத்தில் பல நூற்றுக் கணக்கான பொறியியலாளர்களையும்,கணிதப் பட்டதாரிகளையும் உருவாக்கிய ஒரு கல்வியாளர் என்பதை ஏற்கனவே அறிந்து வைத்திருந்த வகையில் 1979ஆம் ஆண்டுதான் முதன்முதலில் அவரை, அவரது இல்லத்தில் சென்று சந்தித்தேன்.

வல்வெட்டித்துறையில் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, ஆளுமையும் ஆற்றலும் உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கில், "கல்வியே செல்வம்" என்ற மகுட வாசகத்துடன் 1978 ஆம் ஆண்டு,பெபரவரி மாதம் 10 ஆம் திகதி வல்வைக் கல்வி மன்றம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது, ஆரம்பத்தில் இடைநிலைக்கல்வி மாணவர் களுக்கான கல்விச்செயற்பாடுகள் மட்டுமே முன் னெடுக்கப்பட்டு, மாணவர்களதும், பெற்றோரினதும், மதிப்பைப் பெற்றுவந்த நேரத்தில், வல்வெட்டித்துறையிலும், அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் இருந்து க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்விபயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததால் வல்வைக் கல்வி மன்றத்தில் 1979 ஆம் ஆண்டில் இருந்து உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான முடிவை எடுத்திருந்தோம்.

அதற்கமைய கலை, வர்த்தக வகுப்புக்களை ஆரம்பித்ததுடன், விஞ்ஞான, கணித வகுப்புகளையும் ஆரம்பிக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த ஆசிரிய வளவாளர்களைக் கொண்டு எமது மன்றத்தில் விஞ்ஞான வகுப்புகளை ஆரம்பிப்பதற்காக, உயர்கணிதம் மற்றும் பிரயோக கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்து உதவுவதற்காக, அமரர் ச.தில்லையம்பலம் அவர்களிடம் சென்ற

பொழுது, முதலில் எமது கல்வி மன்றத்தின் நோக்கம் மற்றும் அதன் செயற்பாடுகளை விளக்கிய பொழுது, என்னை இடை மறித்து, "வல்வைக் கல்விமன்றத்தைப்பற்றி எனக்கு அதிகம் கூறத்தேவையில்லை. உங்களுடைய மன்றம் ஆற்றி வருகின்ற சேவைகளைப் பற்றியும், கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றில் நீங்கள் எடுத்துவரும் முயற்சிகளைப் பற்றியும் நான் அறிந்து வைத்திருக்கின்றேன்." என்று அவர் பெருமையுடன் குறிப்பிட்டதால், எனது வேலையின் பெரும்பகுதி குறைந்துவிட்டது.

"சேர், எங்களுடைய பிள்ளைகளுக்கு நீங்கள் வந்து கணிதம் எடுத்து,எங்களுடைய பிள்ளைகளையும் உயர்நிலைக்குக் கொண்டு வர உதவவேண்டும்" என்று நான் கேட்டதும்,அவருடைய முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சி எங்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. "இப்படியான ஒரு மன்றத்தின் செயற்பாடுகளில் உங்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் எனக்கும் சந்தோசம். நீங்கள் எப்பொழுது என்று அறிவியுங்கோ நானும் வந்து என்னாலான பங்களிப்பைச் செய்கின்றேன்" அவர் இவ்வளவு பற்றுறுதியுடன் இருப்பார் என்று நாங்கள் நினைக்கவில்லை. அன்று எங்களுடன் அறிமுகமான தொடர்பு வல்வைக் கல்விமன்றத்தில் ஒரு நல்ல கல்விச்சேவையை வழங்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அவரது சேவை வல்வெட்டித்துறையில் இருந்தும் பல மாணவர்கள் கணிதத்துறையில் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்த நிகழ்வின் மூலம் அவருடன் ஏற்பட்ட தொடர்பு மீண்டும் 1991ஆம் ஆண்டு கல்வி உலகின் இன்னுமொரு பயணத்தினூடாகத் தொடர்ந்தது. 1990ஆம் ஆண்டு பருத்தித்துறைச் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவேளை யில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அப்போதைய பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்து பழைய மாணவர் சங்கங்களுக்கே பெருமை சேர்த்த பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின் வேண்டுகோளை ஏற்று 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதியன்று உடுப்பிட்ட அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபராகவும் உடுப்பிட்டிக் கொத்தணியின் அதிபராகவும் கடமை ஏற்ற

பொழுது, அமரர் ச.தில்லையம்பலம் அவர்களே, அதிபரின் கடமைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதேவேளை பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளராகவும் இருந்து பாடசாலையை வழிப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் பாடசாலையின் மீது எவ்வளவு பற்றுக் கொண்டிருந்தார் என்பதற்கு நான் அதிபராகக் கடமை ஏற்றபொழுது, எனது கரங்களைப் பிடித்து உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கண்ணீர்விட்ட அந்தச் சந்தர்ப்பத்தை இன்றும் என்னால் மறக்கமுடியாது. ஆரம்ப காலங்களில் நான் மாணவனாக இருந்தபொழுது, எனது கல்லூரி வடமராட்சியில் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. பல நூற்றுக் கணக்கான மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பி வைத்தது மட்டுமல்லாது, விளையாட்டுத் துறை, சாரணியம், கலை, பண்பாடு போன்றவற்றில் மிக உன்னதமான ஒரு இடத்தை வகித்து வந்தது. ஆனால் பின்னர் இடைக்காலத்தில்,ஒரு குறுகிய காலப்பகுதியினுள் அடுத்தடுத்துப் பல அதிபர்கள் வந்து போனதாலும் யுத்த அனர்த்தங்களினாலும் பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டது.

அதிஷ்ரவசமாக அமரர் க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்ற நிலையில் கல்லூரியின் வீழ்ச்சி தடுத்து நிறுத்தப்பட்டது. அவர் இளைப்பாறியதும் திரு. வே.தி.செல்வரட்ணம் அவர்கள் அதிபராகக் கடமை ஏற்று மூன்று மாதங்களில் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கவே அவரும் அங்கிருந்து வெளியேறி,வடமராட்சிக் கல்விப் பணிமனைக்குச் சென்றுவிட்ட நிலையிலேயே நான் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றிருந்தேன். அடுத்தடுத்துக் கல்லூரி நிர்வாக நடைமுறைகளில் ஏற்பட்ட தேக்கநிலையால் கல்லூரி பாதிக்கப்பட்டிருந்த பொழுது, அவரது உள்ளமும் எந்த அளவுக்குப் பாதிக்கபபட்டிருந்தது என்பதை அன்று அவரது உணர்ச்சி வசப்பட்ட வார்த்தைகளினூடாகத் தெரிந்து கொண்டேன்.

"கல்வித் திணைக்களம் எங்கடை பாடசாலையைத்தான் பரிசோதனைக்களமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகுது. உங்களை யும் எப்போ இவர்கள் மாற்றிவிடுவார்களோ தெரியாது. நீங்களாவது

எங்கடை கல்லூரியை மேல் நிலைக்கு உயர்த்தி வைக்கவேண்டும்" என்று கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தோட என் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு ஒரு யாசகனைப் போல் நின்றார். "சேர்..நீங்கள் ஒன்றுக்கும் யோசிககவேண்டாம். நான் இந்தக் கல்லூரியின் மாணவனாக இருந்து அதன் பாரம்பரியங்களையும், மரபுகளையும் நன்கு அறிந்தவன் என்ற வகையில் உங்களுடையதும்,பழைய மாணவர் சங்கத்தினதும் ஒத்துழைப்புடனும் எனது கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்தி வைப்பேன்." என்று அவரது கரங்களை இறுகப்பற்றிக் கொண்டு அந்த வாக்குறுதியை வழங்கினேன். அன்று அவரது ஆசீர்வாதத்துடன் கல்லூரிப் பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து எனக்குப் பக்கபலமாக இருந்து பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பை வழங்கிவந்தார்.எந்தச் சந்தர்ப்பத்திலும் சில முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போதெல் லாம், அவரது ஆலோசனைகளைக் கேட்காது நான் செயற்படவில்லை. அவர் உபஅதிபராக இருந்தபோதும்,தனது கற்பித்தல் செயற்பாடுகளை மிகவும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வந்ததால் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

அதேவேளை கல்லுரியைப் பொறுப்பேற்றவுடன் பின்வரும் விடயங்களில் அவரும் பழைய மாணவர் சங்கத்தினரும் உனக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கியமை எனது கல்லூரியை வளர்த்தெடுப்பதற்குப் பேருதவியாக இருந்தது.

1. பாடசாலை மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஒழுங்கும் கட்டுப்பபடுகளும்.
2. கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை உருவாக்குதலும்,நடைமுறைப்படுத்துதலும்.
3. கல்லூரியின் உட்கட்டமைப்பு விருத்திகளை மேம்படுத்தல்.
4. பாடசாலைக்குத் தேவையான தொண்டர் ஆசிரியர்களைப் பழைய மாணவர் சங்க நிதியில் இருந்து நியமித்தல்.
5. கல்லூரி நூலகத்தை மீண்டும் உருவாக்குதலும் மேம்படுத்துதலும்
6. கல்லூரியின் மரபுகளையும் விழுமியங்களையும் பேணுதல்.
7. கலை, கலாசாரம், விளையாட்டுத்துறைகளிலும் சாரணியத்திலும் மீண்டும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.

8. நாங்கள் கல்லூரியில் கற்றகாலத்தில் உயர்தர வகுப்புக்களில் மாணவிகளும் கற்றுக்கொண்டிருந்ததால், கல்விச் செயற்பாடுகளில் போட்டித்தன்மை நிலவியது. இதனால் அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். இந்நிலையை மீண்டும் ஏற்படுத்த க.பொ.த. உயர்தர வகுப்புகளில் மீண்டும் மாணவிகளுக்கான அனுமதியை வழங்குதல்.

இந்த வகையில் சமநேரத்தில் மேற்படி அபிவிருத்திகளை முன்னெடுத்தபொழுது, கல்வித்தரம் உயர்ந்து வருவதை வெளிப்படையாகவே பாடசாலைச்சமூகம் உணரத்தொடங்கியதால் கல்லூரிக்கான ஒரு அங்கீகாரம் கிடைக்கத்தொடங்கியதால், அந்தநேரம் நாங்கள் எதனைச்செய்தாலும், அது பாடசாலைச் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில்தான் மாணவிகளை மீண்டும் சேர்ப்பதற்கான கோரிக்கைகள் பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்பட்ட பொழுது, அதனைச் செயற்படுத்த நானும் முயற்சித்தேன். இந்த முடிவைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனையை முதலில் அமரர் தில்லையம் பலம் அவர்களிடமே முன்வைத்தபொழுது, "இது நல்ல முடிவு. அதற்கு முதல் மிகச் சிறந்த கல்விக் கட்டமைப்பையும் ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் பேணவேண்டும். விஞ்ஞானப்பிரிவில் கற்பதற்கு எனது மகளை இங்கு நான் சேர்த்து விடுகின்றேன்." அன்று அவர் எனக்குத்தந்த உற்சாகமும் அவரிடம் இருந்த தன்னம்பிக்கையும் எனக்கு ஒரு உறுதியைக்கொடுத்தது.

அவரைத் தொடர்ந்து திரு. வே.தவேஸ்வரன், திரு. ஜெகநாதன் ஆகியோரும் தமது மகள்மாரை எமது கல்லூயில் கொண்டு வந்து சேர்த்த பொழுது, உடுப்பிட்டியிலேயே பெரும் பூகம்பம் வெடிக்கத்தொடங்கியது. அந்த மூன்று மாணவிகளும் தான் முதன்முதலில் உயிரியல் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களைத்தொடர்ந்து எனது மகளையும் இங்கேயே கொண்டு வந்து சேர்த்தேன். இது படிப்படியாக வளர்ந்து சுமார் 150 மாணவிகள்வரை கற்கத்தொடங்கியதும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் ஒரு மறு மலர்ச்சி ஏற்படத்

தொடங்கியது. அதே வேளை எங்களுக்கும் ஒரு பொறுப்பும்,வகைகூறலும் இருந்ததையும் நாங்கள் உணர்ந்து கொண்டோம்.

அதற்கு அமைய அமரர் ச.தில்லையம்பலம் அவர்களின் மேற் பார்வையில் க.பொ.த.உயர்தர வகுப்புக்கள் சிறப்பாக முன்னெடுக் கப்பட்டன. அதன் பயனாக ஆரம்பத்தில் இங்கு சேர்க்கப்பட்ட மூன்று மாணவிகளும் மருத்துவத்துறைக்குத் தெரிவுசெய்யப்பட்டமை அமைந் தது. அவர்களை அடுத்து 1996ஆம் ஆண்டு என்றுமில்லாதவாறு எமது கல்லூரியில் இருந்து ஒரேநேரத்தில் 27 மாணவர்களும், 1997இல் 26 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டமையால் வடமராட்சி எங்கும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. அதன் விளைவாக நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கொம்மந்தறை, கம்பர் மலை, தொண்டைமானாறு ஆகிய அயல் கிராமங்களில் இருந்தும் பல மாணவர்கள் எமது கல்லூரியை நாடத்தொடங்கியபொழுது அமரர் ச.தில்லையம்பலம் அவர்களின் உள்ளத்தில் ஒரு நிறைவு ஏற்பட்டதை என்னால் உணரமுடிந்தது.

எனது கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டுவந்த ஒவ்வொரு அபிவிருத்தியிலும் அமரர் ச.தில்லையம்பலம் அவர்களின் உழைப்பு இருந்தது. ஆனால் எங்களுடைய மகிழ்ச்சியுடன் மேலும்மேலும் அபிவிருத்திகளை மேற்கொண்டு யாழ்மாவட்டத்திலேயே ஒரு முன்ன ணிப் பாடசாலையாக எமது பாடசாலையை மறுபடியும் கொண்டு வரவேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவேளையில், எனது இடப்பெயர்வு என்னை நிலைகுலைய வைத்துவிட்டது. யுத்த அனர்த்தங்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்த சூழலில் நானும் எனது குடும்பமும் இடம் பெயரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட பொழுது, அமரர் ச.தில்லையம்பலம் அவர்களின் வீட்டிற்குச், சென்று சில மாதங்கள் நான் சென்று வரவேண்டிய நிலையை விளக்கி அதுவரை கல்லூரி நிர்வாகத்தைப் பார்க்குமாறு நான் கூறியதும் அவர் அழுதேவிட்டார். பின்னர் எப்படியோ தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "உங்களுடைய உயிர் எங்களுக்கு முக்கியம். நீங்கள் திரும்பி வரும்வரை உங்களுக்காக எங்கள் கல்லூரி காத்திருக்கும்" என்று கூறியபொழுது எப்படியும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் மீண்டும்வந்து எனது கல்லூரியைப்

பொறுப்பேற்பேன் என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையுடன் சென்ற எனக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வரலாற்றில் அதிபராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் அன்றுதான் கடைசியாக இருக்கும் என்பது தெரியவில்லை. நான் சற்றும்கூட எதிர்பார்த்திருக்கவுமில்லை.

ஆனால், அந்த இடைக்காலத்தில் அவர் அதிபராக இருந்து ஆற்றியசேவை அளப்பரியது. போர்க்காலச் சூழலிலும் கல்லூரியை மிகச் சிறப்பாக நிர்வகித்து வந்ததைத் தொடர்ந்துவந்த ஆண்டுகளில் கல்லூரியின் பெறுபேறுகள் மிக உயர்வாக இருந்தமையைக் கொண்டு வெளிப்படையாகவே எங்களால் உணரமுடிந்தது.

அவர் ஓய்வு பெற்ற பின்னரும் பழைய மாணவர் சங்கத்தினூடாகப் பல அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்தமையைக் கல்லூரிச் சமூகம் என்றும் நினைவு கூர்ந்துகொண்டே இருக்கும். இன்னும் எவ்வளவோ அபிவிருத்திகளைச் செய்து கல்லூரியை மேலும் உயர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று உழைத்துக் கொண்டிருந்த நேரத்தில், யாருமே எதிர்பார்த்திருக்காத வேளையில் எங்களைவிட்டுப் பிரிந்து சென்றமை பேரதிர்ச்சியாக இருந்தது. அவர் தனது பிள்ளைகளையும் நல்லநிலைக்கு உயர்த்தியதுடன் கல்லூரியினது வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் அயராது உழைத்து வந்த ஒரு மாமனிதனாகவே இருந்தார். அவரை இந்தச் சமூகம் மதிக்கின்றது. அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது சிந்தனைகள் எங்களுடனேயே இருக்கின்றன. நாங்கள் அவருக்குச் செய்கின்ற அஞ்சலி என்பது எமது இளம் சமூகத்தினரது கல்வியை அபிவிருத்தி செய்தல் ஒழுக்கவிழுமியங்களைப் பேணுதல் போன்றவற்றை முன்னெடுப்பதே ஆகும். அதன் மூலமே அன்னாரது சேவைகள் என்றும் உணரப்படும்.

ஆம், அமரர் ச.தில்லையம்பலம் அவர்கள் கல்வி உலகின் ஒரு சகாப்தமாகவே வாழ்ந்தார். மறைந்தார் ஆயினும் எங்கள் உணர்வுகளில் ஒரு சரித்திரமாகவே வாழுகின்றார்.

# மறைந்தும் மறையாத மகாகுரு

(திரு. வ. செல்வராசா, மாகாணக் கல்விப்பணிப்பாளர், வட மாகாணம்)

அன்பின் இலச்சினையே அறிவின் இலக்கணமே
பண்பின் பிறப்பிடமே பக்தியின் உறைவிடமே
கடமையின் காவியமே கண்ணியத்தின் திருவுருவே
கணிதக் கலாநிதியே காலன் கைச்சிக்கினையோ!

விந்தைமிகு கணிதத்தை விசித்திரமாய்ப் போதித்து
சிந்திக்க வைத்துச் சிறகடித்துப் பறக்க வைத்த
உடுவையின் மைந்தனே ஊரறிந்த மாகுருவே
உங்கள் நினைவோடு பயணம் தொடர்கின்றோம்.

18.04.2014 வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு எனது செல்லிடத் தொலைபேசி சிணுங்கியது. சிணுக்கத்தைக் கலைத்தேன். பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து சுதர்சனின் குரல். சாவுச்செய்தியைக் கூறுவாரென நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதுவும் தில்லையம் பலம் ஆசிரியரின் சாவுச்செய்தியைக் கேட்பேனென நான் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அவர் இதனைக் கூறத்தானே தொலைபேசியிற் தொடர்பு கொண்டார். அவரது செய்தி எனது உள்ளத்தைக்குடைந்தது.

தில்லையம்பலம் சேரை 1997ஆம் ஆண்டு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் வகுப்பறையிற் சந்தித்தேன். கணிதத்தை உயர்தரவகுப்பு மாணவருக்குக் கற்பித்துக்கொண்டி ருந்தார். மாணவர்கள் கூறிச்சென்ற பாதையில் அவரது வெண்கட்டி பயணித்துக் கொண்டிருந்தது. பயணம் தொடரவில்லை. மாணவர்களின் பாதை தவறிவிட்டது, எங்கே தவறு செய்தீர்கள் எனக்கேட்டார். மாணவர்கள் தவறுவிட்ட இடத்தைச் சுட்டிக் காட்டினர். மீண்டும் மாணவர்கள் கூற அதற்கேற்ப அவரது வெண்கட்டி நகர்ந்தது. கணக்கைச் செய்துமுடித்தார். பாடநேரமும் முடிவடைந்தது. கலாநிதி யோகச்சந்திரனிடம் நான் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் கணிதம் கற்றேன். என்னை அவரது கற்பித்தலுக்கு அழைத்துச் சென்றீர்கள் என்று நான் கூறினேன். மறந்தும் மறவாத கணிதத்தை மீண்டும் மீட்பதற்கு நீங்கள் உதவினீர்கள் என்று

கூறினேன். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு ந.அனந்தராஜ் இடம்பெயர்ந்து சென்றமையால் குறுகிய காலம் தில்லையம்பலம் சேர் அதிபராகக் கடமையாற்றினார். அதிபராகக் கடமையாற்ற அவர் விரும்பவில்லை. என்னை விடுவியுங்கள். நான் கணிதம் கற்பிக்க வேண்டும் என்று பல தடவைகள் கூறினார். பதவியை விரும்பாது கற்பிக்கும் பணியை நேசித்த மாமனிதர் அவர். அவர் அதிபராகக் கடமையாற்றிய குறுகிய காலத்தில் நான் பல விடயங்களை அவரிடம் கற்றேன். போதனையிற் சாதனைகள் புரியும் ஆசிரியர்களை அவர் உயர்நிலையில் வைத்திருப்பதை அவதானித்தேன்.

தில்லையம்பலம் சேர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால் கற்பித்தற் பணியிலிருந்து அவர் ஓயவில்லை. தனது வீடு நோக்கித் தேடி வருகின்ற மாணவர்களுக்கு அவர் இலவசமாகவே கற்பித்தார். காலை யிலிருந்து மாலைவரை கற்பித்தற் பணி தொடர்ந்தது. காசுக்குக் கல்வியை விற்கும் இக்காலத்தில் நவீன குருகுலக் கல்வியை அவரது வீட்டிற் கண்டேன். தேடிவரும் மாணவர்களுக்குக் கணிதம் போதிப்ப துடன் சிற்றுண்டி உணவும் வழங்கிக் குருகுலக்கல்வி முறையை நினை வூட்டினார்.

தில்லையம்பலம் சேரின் வீட்டிற்குச் சென்றால் பல மணித்தியா லங்கள் செலவிடுவேன். பல விடயங்களைப் பற்றி அவர் கூறுவார். அவரிடமிருந்து நான் பெற்றஅனுபவங்கள் பல. என்னிடமிருந்தும் பல புதிய விடயங்களை அவர் பெற்றுள்ளார். சாவு தன்னை நெருங்குவதை அறிந்தாரோ தெரியவில்லை. கடைசியாகச் சந்தித்தபோது எனக்கு நற்சான்றிதழ் வழங்கினார். அவரிடம் நற்சான்றிதழ் பெறுவதென்பது மிகவும் கடினமென்பது எனது அனுபவத்திலிருந்து அறிந்த உண்மை. தில்லையம்பலம் சேரிடம் கற்ற மாணவர்கள் பூமிப் பந்திற் பரந்து வாழ்கின்றார்கள். அவரது மாணாக்கரொருவர் வருடாவருடம் க.பொ.த (உ/த) பரீட்சையில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் மாவட்டத்தில் முதலிடம் பெறுபவர்களுக்குப் புலமைப் பரிசில் நிதியுதவி வழங்கி வருகின்றார். இதற்கான இணைப்பாளராகத் தில்லையம்பலம் சேர் கடமையாற்றினார். இவ்வாண்டும் அவர் மாகாணக் கல்வித்திணைக் களத்திற்கு வருகைதந்து இதனை வழங்கினார். அன்று அவர்

மாணவர்களுக்கு உரையாற்றும் போது "எதிர்காலத்தில் நீங்களும் இவ்வாறு மாணவர்களுக்கு உதவுவீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறியதை என்னால் மறக்க முடியவில்லை.

தில்லையம்பலம் சேரிடம் கணிதம் கற்ற மாணவர்கள் பலரை எனக்குத் தெரியும். வித்தியாசமான பல மாணவர்கள் அவரிடம் கற்றனர். முதல், இடை, கடை மாணவர்களுக்கு ஏற்றவாறு கற்பித்துப் பலரைக் கரை சேர்த்தார். இறுதிவரை போதித்தார். இன்னும் சிறிது காலம் அவர் இருந்தால் பலருக்கு உதவியிருப்பார். காலன் கையிற் சிக்கிவிட்டார். தில்லையம்பலம் சேர் ப றந்தும் மறையாத மகாகுரு. அவரது பாதையில் அவர் மாணவர்கள் பயணிக்க வேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்.

# எனது பார்வையில்
# அமரர் தில்லையம்பலம் அவர்கள்

(உடுவை எஸ். தில்லைநடராஜா
பாராளுமன்றப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்)

அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த கல்விப் பெருந்தகை அமரர் தில்லையம்பலம் என்ற பெயரைக் கேட்டால் என் மனதில் உடனடியாகத் தோன்றுவது எப்போதும் புன்சிரிப்புத் தவழும் அவரது முகம். எதிலும் எளிமையான சுபாவம், இதமானதும் மென்மையானதுமான பேச்சு. இவற்றின் சொந்தக்காரர் அதிபர் திலகம் ஆசிரியமாமணி அமரர் ச.தில்லையம்பலம் அவர்களே. சிறுவயது முதல் நான் படித்த அதே உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில்தான் அவரும் உயர் வகுப்புகளில் படித்திருக்கிறார். அப்போது நான் அவரை அறிந்து வைத்திருக்கவில்லை. அவசியமான போதுகூட அவரைப் பற்றி அறியாதிருந்துள்ளேன்.

நேரடியாகவே விடயத்திற்கு வருகின்றேன். 1960ம் ஆண்டு டிசெம்பர் வரை படிப்பில் கெட்டிக்காரன் என்ற பெயர் எடுத்து வகுப்பில் முன்னணியில் திகழ்ந்த எனக்கு 1961க்குப் பின் விஞ்ஞான பாடங்கள் மூளைக்குள் ஏற மறுத்தன. 1963 டிசெம்பர் க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள் என்னை ஏமாற்றி விட்டன. அப்போது க.பொ.த. (சா/த) பரீட்சை டிசெம்பர் ஆகஸ்ட் என இரண்டு தடவைகள் நடைபெறும். பிரதி அதிபர் திரு றோபேர்ட் நவரத்தினம் என்னை நன்கு புரிந்துகொள்ள, அவரின் அறிவுரையோடு. க.பொ.த (சா/த) 1964 ஆகஸ்ட் மாதப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களுக்குப் பதிலாகக் கலைப் பாடங்களில் எழுத என்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தேன். கல்லூரி அதிபர் திரு. எஸ்.எஸ் செல்லத்துரை பரீட்சையில் பாடங்களை மாற்றி எழுதப் பெற்றோரின் அனுமதியும் தேவை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பெரும்பாலான பெற்றோர் போல எனது பெற்றோரும் என்னை ஒரு doctor ராகப் பார்க்கவேணும் என்று கனவு கண்டு கொண்டிருந்த காலத்தில் எனது பெற்றோரிடம் எப்படிக் கலைப் பாடங்களை மாற்றி எழுத அனுமதி பெறுவது? கல்யாணப்பரிசு படம் பார்த்ததால் அம்மாவுக்கு விட்டேன் ஒரு டூப் காலையில் பள்ளிக்கூடம் போவதற்கு முன் அம்மா maths படிக்க

கஷ்டமாக இருக்கு இந்தச் சோதனைக்கு maths எடுக்காமல் arithmatic எடுக்கப் போறன்" என்றேன். மாலையில் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்குப் போனதும் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அம்மா முந்திக் கொண்டு "தில்லையம்பல மாஸ்ரரட்டைப் படிச்ச பொடியள் எல்லோரும் பாஸாம், நீயும் அவரட்டைப் போய்ப்படி அவர் காசும் வாங்கிறதில்லை யாம், நல்லாச் சொல்லிக் குடுக்கிறாராம்" வீட்டில் இருக்க முடியாத நிலையில் உடுப்பிட்டிச் சந்திக்கு வந்து கொஞ்சநேரம் நின்று கொண்டு யோசித்தேன். அப்போதெல்லாம் எனக்குத் தெரிந்த தில்லையம்பலம் மாஸ்டர் வல்வெட்டிப் பக்கமாக இருந்து ஸ்கூட்டரில் வரும் ஆசிரியர் தான். அவரது வீடு இருக்கும் இடமும் சரியாகத் தெரியாது. உடுப்பிட்டி சந்தியிலிருந்து வன்னிச்சி கோவிலடி வரையும் பொடி நடையில் போய் வந்து இரவு எட்டு மணியளவில் அம்மாவுக்கு விட்டேன் இரண்டாவது டுப்.

"அம்மா தில்லையம்பல மாஸ்டர் வீட்டிலை கதிரை மேசை காணாதாம் எனக்கு முதல் அங்கை போன பொடியங்களுக்கே இருக்க இடமில்லையாம்" அம்மா ஒரு மாற்று யோசனையைச் சொன்னார். "இஞ்சை வீட்டிலை இருக்கிறதில ஒரு சின்ன மேசையையும் கதிரையையும் கொண்டு போய் தில்லையம்பல மாஸ்டர் வீட்டை வை. சோதினை முடியத் திரும்ப எடுத்துக் கொண்டு வரலாம்" நான் முணுமுணுத்துக் கொண்டே சிணுங்கினேன். "என்னை மேசையையும் கதிரையையும் காவிக்கொண்டு உடுப்பிட்டிச் சந்தியாலை போகச் சொல்றீங்களோ?" எனக்கு வந்த கோபத்தில் ஒரு ஆயுதத்தைப் பாவித்தேன் ஒன்றும் சாப்பிடாமல் படுத்துவிட்டேன்.

அம்மா தனக்குத்தானே சொன்னது நன்றாகக் கேட்டது. "நாளைக்குக் காலமை நான்தான் சின்ன மேசையையும் கதிரையையும் கொண்டு போய் தில்லையம்பலம் மாஸ்டர் வீட்டை வைக்க வேணும்". ஒரு பத்து நிமிடத்தால வீட்டுக்கு முன்னால் இருந்த படலை திறந்து சத்தம் கேட்கக் கண் விழித்துப் பார்த்தேன். நல்ல வேளை நான் பயந்தது போல் அம்மா மேசையையும் கதிரையையும் காவவில்லை. எங்கேயோ பக்கத்து வீட்டுக்குப் போவது போலத் தெரிந்தது. சுமார் அரை மணி நேரத்திலை திரும்பி வந்த அம்மா எனக்கு அதிர்ச்சி அளிக்கும் செய்திகளைச் சொன்னார். நீ வல்வெட்டிப் பக்கமாக எல்லே போனனி? அது வேறை தில்லையம்பல மாஸ்டர், இவர் நவிண்டிலிலை இருக்கிற தில்லையம்பல

மாஸ்டர், அங்கை வாங்கு மேசையெல்லாம் இருக்காம். உடுப்பிட்டியிலை இருந்து கனபேர் போறவங்களாம். மகேந்திரனும் இண்டைக்கும் போய் வந்தவனாம். நீயும் நாளைக்கு துடக்கம் போ".

இவ்வளவு தகவலுக்கும் பிறகு நான் வாய் திறக்க முடியுமா? தகவலைச் சொன்னவர் எனது பெரியம்மாவின் மகன். எனது தாயார் மட்டுமல்ல பெண்கள் நாலைந்துபேர் சேர்ந்தால் ஊர் உலக செய்திகள் எல்லாம் அவர்களுக்குத் தெரிந்து விடும்.

அடுத்த நாள் மாலை பெரியம்மாவின் மகனுடன் சேர்ந்து நானும் நவிண்டில் சென்று ஆசிரியர் தில்லையம்பலம் கணித பாடம் படிப்பிக்கும் இடத்துக்கு அண்மையிலுள்ள பேக்கரிக்கு முன்னால் உள்ள மணலில் இரண்டு மணி நேரம் ஆறுதலாக இருந்தோம். அரை றாத்தல் ரோஸ்ட் பாண் 15 சதம். மெல்லிய சூட்டோடை சாப்பிட நல்ல ருசி, சம்பலும் வேண்டாம் கறியும் வேண்டாம். ஒரு கிழமையாக ரோஸ்ட் பாண் சாப்பிட்டேனே தவிர தில்லையம்பல மாஸ்டர் பற்றி அவரது கற்பிக்கும் ஆற்றல் பற்றி அறிந்து கொள்ள அப்போது முயற்சிக்கவில்லை.

சுமார் 50 வருடங்களுக்கு முன்பே தில்லையம்பல மாஸ்டர் காசு வாங்காமல் காலமெல்லாம் பயன் தரும் கணித பாடத்தில் எப்படி அதிக புள்ளிகள் பெற்றுச் சித்தியடைவது என்று மாணவர்கள் தடுமாறிய போது தம்மை முழுமையாக அர்ப்பணித்து, மாணவனைத்தவிர வேறு எதையும் எதிர்பார்க்காமல் பாடம் சொல்லிக்கொடுத்தார் என்பதை எங்கள் பெற்றோர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். அமரர் தில்லையம்பலத்திடம் மாணவனாக நான் படிக்கக் கொடுத்து வைக்கவில்லை. ஒருகிழமை ரோஸ்பாண் சரியாகச் சாப்பிடயில்லை. தில்லையம்பலம் மாஸ்டரின் பெயரைச்சொல்லி, பேக்கரிக்கு முன்னால் உள்ள மணலில் இருந்து ரோஸ் பாண் சாப்பிடுற கதை அம்மாவுக்கு போட்டுது. தில்லையம்பல மாஸ்டரின் பெயரைப் பழுதாக்கக்கூடாது என்று சொல்லி வீட்டில் சிறையில் இருத்திவிட்டா அம்மா.

70களுக்கு முந்திய காலத்தில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய கற்பித்தல் கடமையாகக் கருதப்பட்டது. பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் பெருமளவில் இல்லாதகாலம். காலையிலும் மாலையிலும்

தனிப்பட்ட டியூசன் வகுப்புகள் இல்லாத காலம். இவரது சகபாடியும் இணைபிரியாத நண்பருமாகிய ஒருவர் ஒரு முறை அமரர் தில்லையம்பலத்தைப் பற்றிச் சொல்லும் போது பாடசாலை நாட்களி லேயே கணித பாடத்தைச் சகமாணவர்களுக்கு ஆசிரியர்களைப் போல, படிப்பிக்கும் ஆற்றல் உள்ளவராக இருந்ததாகவும் அதனால் ஆசிரியர்கள் இல்லாத நேரங்களில் அமரர் தில்லையம்பலம் மாணவர்க ளுக்கு ஆசிரியராகக் கடமையாற்றியதாகவும் தெரிவித்தார்.

பின்னர் நுவரேலியாவில் ஆசிரியராகக் கடமையாற்றி, ஆசிரிய கலாசாலைக்குச் சென்று பயிற்சி பெற்றதையும் அறிய முடிந்தது. ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளிவரும் பெரும்பாலான ஆசிரியர்களிடம் கற்பிக்கும் ஆற்றலும் மாணவர்களைத் தம்வழிப்படுத்தி ஒழுக்க முள்ளவர்களாக்கும் திறமையும் இருப்பினும் இவை அமரர் தில்லையம் பலத்திடம் சராசரிக்கு மேற்பட்டதாக இருந்தது.

தன் குடும்ப மேம்பாட்டிற்கு அன்றி மாணவர் மேம்பாட்டிற்காக, உணர்வுடன் உழைத்து மாணவரின் மேலான மதிப்பையும் பெற்றோரின் பெரும் அன்பையும் பெற்றுக்கொண்டார். யார் அவரிடம் சென்று கேட்டாலும் எதுவித வேறுபாடும் காட்டாது பாடம் சொல்லிக் கொடுத்து, பல மாணவர்கள் சாதனைகள் நிலைநாட்டக் காரணமான கற்பித்தல் சிகரம் தில்லையம்பலம் என்று சொன்னால் யாரும் இரண்டாவது கருத்துச் சொல்லமாட்டார்கள்.

கணிதம் கற்கவந்த மாணவர்களைத் தன்சொந்தப் பிள்ளை களாக எண்ணி மனம் வைத்துக் கற்பித்தார். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானாக வளரும்" என்று பெரியவர்கள் சொல்வது உண்மை என்பது போல அமரர் தில்லையம்பலத்தின் பிள்ளைகளும் நல்ல நிலைக்கு உயர்ந்தார்கள்.

பிற்காலத்தில் 90களில் பிரச்சினைக்குரிய காலத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். ஒரு புறம் போராளிகள்... இயக்கங்கள்... மறுபுறம் பாதுகாப்புப் படையினர் இவர்களுக்கிடையில் சமநிலை பேணுதல் என்பது கூரிய கத்தியின் மேல் நடப்பதற்கு ஒப்பானது. சோதனை மிக்க அக்காலத்தில் அதிபர் அமரர் தில்லையம்பலத்தின் மனநிலையும் உடல்நிலையும் பாதிக்கப்பட்டது.

ஓய்வு பெற்றாலும் ஓயாமல் கல்விப் பணி, சமூகப்பணி எனத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பொதுப் பணிகளில் பல சாதனைகளை நிலை நாட்டினார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ஒரு சம்பவம். சில வருடங்களுக்கு முன் கொழும்பில் எனது வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம், திறந்து பார்த்தால் அமரர் தில்லையம்பலமும் அவரது மகனும். அப்போது அவர் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். பழைய மாணவர் சங்கத்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டிருக் கவில்லை. சிறிது நேரம் என்னுடன் கதைத்துவிட்டு அவுஸ்ரேலியாவில் வசிக்கும் மாணிக்கவாசகரின் தொலைபேசி இலக்கத்தை என்னிடம்தான் பெற்று ஏதோ கதைக்கின்றார். நிதியுதவி என்பதை விளங்கிக் கொள்வதில் எந்த விதமானதொரு சிரமமும் எனக்கு இருக்கவில்லை. தொலைபேசி உரையாடல் முடிந்ததும் "Thank you sir" என்று எனக்கு நன்றி சொன்னார். நான் எனது குரலை உயர்த்தினேன் சற்று தடுமாற்றத்தோடு "Sir". அவரது பதில் "ஓம் தம்பி நீங்க டெலிபோன் நம்பர் தந்ததால் மாணிக்கவாச கருடன் கதைத்தேன். Professor துரைராசாவின் பெயரால் ஒரு மாணவனுக்குப் புலமைப்பரிசில் கொடுக்க ஒரு லட்சம் ரூபா அனுப்புறாராம்" ஆசிரியப் பெருந்தகை கேட்டால் ஆயிரமல்ல லட்சக் கணக்கில் வழங்கத்தக்க நிலையில் வசதியும் விருப்பமும் கொண்ட அவரது மாணவர்கள் பல இடங்களில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை.

இவர் பழைய மாணவர் சங்கத் தலைவராக இருந்த போது 13.04.2014 உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் வெளிநாட்டுக் கிளைகளின் பழைய மாணவர்கள் உட்பட இங்கேயுள்ள பழைய மாணவர்களும் கலந்து கொண்டதுடன் கல்லூரியின் பௌதீகத் தேவைகளின் ஒரு பகுதியாகக் கூட்ட மண்டபத் திற்கு உரிய நாற்காலிகள், திரைச்சீலைகள், உள்ளக ஒலிபரப்பி, துவிச்சக்கர வண்டி நிறுத்துமிடம் என்பன அமைத்து வழங்கப்பட்டன. மைதானமும் கல்லூரி மண்டபமும் புனரமைக்கப்பட்டன.

கல்விப் பெருந்தகை அமரர் தில்லையம்பலம் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் கல்லூரித் தேவைகள் யாவும் நிறைவேறி யிருக்கும். அவரின் ஆத்மா சாந்தியடையவும், அவரது குடும்பத்தினர் நன்றாக வாழவும் அவரது மாணவர்கள் மேலும் உயர்வடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE
## &
## GIRLS' COLLEGE PPA

CANADA
Est. 1999

# ஈசன் தில்லை அம்பலம்
# ஆசான் தில்லை எம் பலம்

உடுப்பிட்டி அ.மிக்கு அர்ப்பணம் ஆனவர்
எடுப்புற்ற எம் பள்ளி அந் நாள் மாணவர்
இடுக்கற்று நாம் பயில ஆசானும் ஆயினர்
மிடுக்குற்ற அதிபரான தில்லையர் மேலவர்

புனித நற் பணியினைப் புரிந்த இத்தூயோன்
கணிதம் பயிற்றும் கலையில் மேலோன்
மனிதம் நேயம் மறவான் மாசில் நூலோன்
இனியெம் நெஞ்சில் நிலைப்பான் சாலோன்

தில்லை அம்பலம் என்றும் திரு நடம் ஆடுவார்
தில்லை எம் பலம் என்றிவரை மாணவர் நாடுவார்
தில்லை கணித பாடம் எனில் பற்பலர் கூடுவார்
தில்லை இன்று இல்லை இனி எங்கவர் ஓடுவார்

உடு ஒரு மாணவியை உவந்து இவர் மணந்தனர்
உடு ஆசிரியையாய் அவரும் பின் இணைந்தனர்
உடு அ.மி சிறக்க இணைந்து இவர் உலைந்தனர்
உடு மக்கள் உலைந்திட இவர் ஏன் பிரிந்தனர்?

ஓய்வு இவர் பெற்றார் பின் ஓய்வூதியமும் பெற்றார்
ஓவு இலாப் பணி அதிலோ ஓய்வு ஒழிவுகள் அற்றார்
மேவு பழையர் சங்கத் தலைமை தனை மேலவர் உற்றார்
பாவி காலனால் பாதியில் பிரிய நாம் நாதிகள் அற்றோம்

கல் வியைக் கற்றிடக் கடை மாணவரையும் ஊக்கினார்
நல் வைத்தியர் ஆக இவர் பல மாணவரை ஆக்கினார்
பல் வைத்தியர் நிலைக்கு தன் ஒரு மகளைத் தூக்கினார்
நல் வைத்தியராகி மறு மகள் நோய் நொடி போக்கினார்

பொறி இயல் ஆளரான இவர் மாணவர் பலப் பலர்
பொறி இயல் அறிஞனாய் இவர் ஏகமகன் இன் றுளன்
நெறி முறை வழுவாத எம் தில்லையர் வெகு நல்லவர்
அறி முறை தனைத் தந்த இந்த அருந்தவர் இன் றிலர்

கனடாவில் உள்ளவரும் இவர் இல்லவர் துயர் பகிர்கிறோம்
கனவானாம் தில்லை மாஸ்டர் நினைவினில் நாம் துயர்கிறோம்
பழம் நாள் நினைவு களை அசை மீட்டு அதில் அமிழ்கிறோம்
பழம் நீ முருகன் தாளில் குரு நீ வாழ நாமும் தொழுகிறோம்

கவலை பகிர்வது,
கனடா வாழ்
பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்

# UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE

PPA Australia (Sydney Branch)

## அமரர் எஸ்.தில்லையம்பலம்

நாம் பயின்ற காலத்தில் எமக்கெல்லாம் பக்கத் துணையாயிருந்து மனவுறுதி தந்த ஆசான் தில்லையம்பலம் ஆசிரியர் பாகுபாடற்ற தன் சேவையால் இன்றும் எம்மனதில் வாழும் அவர் தனக்கென்றே வகுத்துக் கொண்ட கற்கை முறையால் கல்வியில் எம்மை முன்னிலைப்படுத்தியவர். அக் கல்லூரிக்கு அதிபராக அமர்ந்து கல்லூரியைப் பெருமைப்படுத்தியவர்.

தான் நோய் வாய்ப்பாட்டிருந்த வேளையிலும் பழைய மாணவர் தாய்ச் சங்கத் தலைமைப் பொறுப்பையேற்று இயன்ற பணியினை நல்கிடுவோம் வாரீர் எனப் புலம் பெயர் தேசத்திலும் இயங்கிய பாடசாலைப் பழைய மாணவர் சங்கங்கள் புத்துயிர்ப்புப் பெற்றுவர நேரிய வழி காட்டி வேருரம் கொண்ட மரம் போன்று வீறு கொண்டு நின்று அனைவர்க்கும் அறிவு புகட்டும் கல்லூரிக்கு வளங்கள் பல சேர்தவர். கல்லூரியால் சான்றோர் பலர் உருவாகிட தன்னுழைப்பால் உரமாக்கியவர் எங்கள் ஆசான். நாமும் நமக்கென்று நலியாக கல்விக்கூடமொன்றுண்டென்று எம்மையும் பெருமை கொள்ளவைத்தவர் கல்வித்துறையில் மட்டுமல்ல சமூக சேவையிலும் முன்மாதிரியாக உயிர் மூச்சுள்ளவரை உழைத்து வாழ்ந்து காட்டியவர் கல்வித்துறைக்கு அவர் ஆற்றிய பணி என்றென்றும் உயிர் வாழும்.

தன்னலம் பேணாத் தகைமை பெற்ற சான்றோன் எம் பாசத்திற்குரிய தில்லையம்பலம் ஆசிரியர் அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் நாம் அவர் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கும். உறவினர்க்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிற்சலாந்துக் கிளை சார்பாக.

சுவிற்சலாந்து 20.05.2014

திரு. ச.இரவிச்சந்திரன்
தலைவர்

UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE
&
GIRLS' COLLEGE PPA

SWITZERLAND

## செம்மையான ஆசான்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வளர்த்தோர் பலர் உறுதியுடன், இறுதிவரை கல்லூரிச் சமூகத்தை வளர்த்தோர் சிலர் உலகறிந்த கல்விமான்கள் பலர் உதித்த வடமராட்சி மண்ணில் உதித்து உடல்வருத்தி ஊன் உருக்கிக் கல்விச்சேவை யாற்றி இறைவனடி சேர்ந்தீரே!

கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி இயம்பாத தமிழ் இலக்கிய நூல்கள் இல்லை என்றால் மிகையாகாது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் முதல் பாரதி பாடல் வரை கல்வி பற்றி இயம்பாத நூல்கள் மிகக் குறைவு. சுப்பிரமணிய பாரதியாரின் முற்போக்குப் பாடல் வரிகள்

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னச் சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள கருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

இந்தப் பாடலின் சுருக்கத்தைக் கணித முறையில் குறிப்பிடின்

1 ஏழைக்கு எழுத்தறிவித்தல் = அன்ன சத்திரம் 1000நாட்டல் / ஆலயம் 10000 நாட்டல்

உணர்வு பூர்வமாகத் தில்லையம்பலம் மாஸ்ரரிடம் கணிதத் துறையின் தொடர்பு வேகம் (Albert Einstine's Relativity Theory) கற்ற மாணவர்கள் தற்போதும் உணர்ச்சியுடன் நீங்கள் கற்பித்த முறையைச் சொல்லி மகிழ்வதுண்டு.

சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் பலர் ஒதுங்கிப் போய் ஓய்வெடுப்பதுண்டு. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் தாய்ச் சங்கத்துத் தலைவனாய், ஆஸ்திரேலியா தமிழ் பொறியியலாளர் அமைப்பின் புலமைப்பரிசிலை மாணவருக்கு வழ்ங்கும் பாரிய பொறுப்புக்களை செம்மையாகச் செய்தவேளை காலம் தன் கணக்கைப் போட்டது எமக்கெல்லாம் சற்று ஏமாற்றத்தைத் தந்தது. உம்பிரிவால் வாடும் உமது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் எமது மனமார்ந்த ஆறுதல்களை தெரிவித்துக்கொள்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், சிட்னி ஆஸ்திரேலியாக் கிளை

# ஓயாது உழைத்த எனது கணித ஆசான்

(அப்பாத்துரை சுபாகரன்
1991 க.பொ.த (உயர்தர) கணிதப்பிரிவு மாணவன்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

எனது கணித ஆசான் தில்லையம்பலம் Sir எனக்குக் கணிதம் கற்பிக்கத் தொடங்கியது 1984ஆம் ஆண்டு, எனது ஆறாம் வகுப்பில். முதன் முதலாக அவர் வகுப்பிற்கு வந்தது இன்னும் பசுமரத்தாணி போல எனது நினைவில் நிற்கின்றது. அந்த நாட்களில் அவர் எமது பாடசாலையில் ஒழுக்கத்திற்குப் பொறுப்பாகவும் இருந்தார். பலமுறை ஒழுக்கக்கட்டுப்பாட்டை மீறிய மாணவர்களைத் தண்டிப்பதைப் பார்க்கக் கூடியதாக இருந்ததால், மாணவர்களுக்கு அவரைக் கண்டால் கலக்கம்.

அவர் முதல் நாள் வகுப்பிற்குள் நுழையும் போது எனது சக மாணவர்களுடன் நானும் "Good Morning Sir" என்று சொல்லி வரவேற்றோம். ஆனால் அவர் பதிலேதுவும் கூறாமல் தனது ஆசனத்தில் அமர்ந்து விட்டார். வகுப்பு முழுக்க ஒரே மயான அமைதி. சிறிது நேரம் வகுப்பை உற்றுக் கவனித்த பின், எங்களைப் பார்த்துத் தமிழில் ஒருவரை எவ்வாறு வரவேற்பது என்று கேட்டார். "வணக்கம்" சொல்லி வரவேற்போம் என்று பதில் சொன்னோம். பின்பு, Sir என்பதை எவ்வாறு தமிழில் சொல்வது என்று கேட்டார். மாணவர்கள் யாரும் பதில் சொல்லவில்லை. "Sir" என்ற ஆங்கில வார்த்தைக்குரிய தமிழ் வார்த்தை "ஐயா" என்று அவரே சொல்லி, இனிமேல் அவர் வகுப்பிற்கு வரும்போது "வணக்கம் ஐயா" என்று எழுந்து நின்று வரவேற்க வேண்டுமென்றும் அவர் அமருங்கள் என்று கூறியதும் "நன்றி ஐயா" என்று பதிலுக்கு எம்மைக் கூறச்சொல்லி அதன் பின்னர் ஆசனங்களில் அமருமாறும் கேட்டுக் கொண்டார். அன்றிலிருந்து அவர் வகுப்பிற்கு வரும்போது நாங்கள் அவ்வாறே செய்தோம். இன்று "ஐயா" என்ற வார்த்தை தமிழ் பேசும் மக்களிடம் அருகிவிட்டாலும், அவர் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்த முதல் ஒழுக்கம் "வணக்கம் ஐயா". எனது வகுப்பு மாணவர்கள் அவரை "ஐயா" என்று செல்லப் பெயர் சொல்லி அழைக்க ஆரம்பித்தார்கள்.

காலப்போக்கில், வடமராட்சியின் பலபாகங்களிலிருந்தும் அவரது வீட்டிற்குப் பிரத்தியேக வகுப்பிற்குச் சென்ற மாணவர்கள் இதே செல்லப் பெயரைச் சொல்லியே அழைப்பார்கள். இந்தச் செல்லப் பெயரைச் சொல்லி அழைக்க ஆரம்பித்த பெருமை எமது வகுப்பு மாணவர்களாகிய தரம்- 6A ற்கே சாரும்.

தரம் 6ல் இருந்து க.பொ.த.(உயர்தரம்) வரை அவரிடம் கணிதம் படிக்கும் பாக்கியம் பெற்ற மாணவர்களில் நானும் ஒருவன். எனது வகுப்பு மாணவர்களில் நா ம் இலக்கணாவத்தை நித்தியும் அந்தப் பெருமைக்குரியவர்கள். நித்தி ஆறாம் வகுப்பில் C-பிரிவில் இருந்தான். அவனது மூத்த சகோதரிகள் தில்லையம்பலம் Sirரிடம் கணிதம் கற்றவர்கள். A-பிரிவிற்கு மட்டும் கணிதம் கற்பிக்க அவர் நியமிக்கப்பட்டிருந்ததால், சகோதரிகளின் அறிவுரையால் நித்தி எங்கள் வகுப்பிற்கு மாறினான். நித்தியின் தந்தையார் எமது பாடசாலையில் ஆசிரியராக இருந்ததால், அவனுக்கு வகுப்பு மாறுவதில் சிரமம் ஏற்படவில்லை. சிலகாலம் எமது பாடசாலையில் யுத்தம் காரணமாகக் கற்பித்தல் செயற்பா டுகள் சிறப்பாக அமையவில்லை. 1988ஆம் ஆண்டு திரு சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். அவர் தில்லையம்பலம் Sir மேல் மிகுந்த மரியாதை வைத்திருந்ததை நான் அவர் பதவி ஏற்ற ஆரம்பத்திலிருந்தே அவதானித்தேன். ஆனால், அது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை ஏனென்றால் Sir இடம் நான் ஏற்கனவே நான்கு வருடங்களிற்கு மேல் கற்றிருந்ததால், கற்பித்தலில் அவரின் அர்ப்பணிப்பு எனக்கு நன்கு தெரியும். சிதம்பரப்பிள்ளை Sir- தில்லையம் பலம் Sir கூட்டணியில் எமது பாடசாலையின் கற்பித்தல் செயற்பாடுகள் வேகமாக முன்னேற்றம் கண்டன.

எப்பொழுதுமே, Sir இன் வகுப்பு மிகவும் கலகலப்பாகச் சோர் வில்லாமல் போகும். புத்தகப் படிப்பு என்ற உணர்வில்லாமல் ஒரு கலந்துரையாடலாக, அதாவது மாணவர்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பதாக அவரின் நடைமுறை அமைந்திருக்கும். பல சந்தர்ப்பங் களில் கணித பாடத்தில் ஆரம்பித்து விளையாட்டு, அரசியல், வரலாறு என்று ஒரு வட்டமடித்து மீண்டும் விட்ட இடத்திற்கு வந்து கணித பாடம்

தொடரும். எவ்வளவு வட்டமடித்தாலும் Sirக்கு விட்ட இடம் ஞாபகமிருக்கும். அதிலிருந்து மறுபடியும் தொடருவார். பாடசாலையில் படித்ததைத் தவிர, நாங்கள் அவரது வீட்டிற்குப் பிரத்தியேக வகுப்பிற்கும் சென்றோம். கல்விகூட வியாபாரமாகிவிட்ட இந்தக் காலத்தில், Sir பற்றிப் பெருமையாகக் கூறிக் கொள்ளும் விடயங்களில் ஒன்று என்னவென்றால், அவர் வசதிகுறைந்த மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதில்லை என்பதாகும். இந்தக்கால மாணவர்கள் பலருக்கு இது ஆச்சரியத்தை ஏற்படுத்தக்கூடும். நான் இவரது தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலமையைக் கண்டு வியந்திருக்கின்றேன். முதன் முதலாக, மடக்கை கற்பித்த பொழுது "Logarithm" என்ற வார்த்தையை எழுதி அதை உச்சரிக்குமாறு மாணவர்களிடம் கேட்டுக்கொண்டார். எல்லோரும் தவறாக உச்சரித்தோம். அவர் சரியான உச்சரிப்பைச் சொல்லிக் கொடுத்தார்.

Sir மிகவும் கண்டிப்பானவர் என்னையும் பலமுறை கண்டித்திருக்கிறார். நாங்கள் கல்வியில் உயர்நிலை அடைந்ததற்கு இந்தக் கண்டிப்பும் ஒரு முக்கிய காரணம் என்றால் அது மிகையல்ல. கோபப்பட்டாலும் அந்தக் கணத்திலேயே எல்லாவற்றையும் மறந்து விடுவார். மனதில் வைத்து வஞ்சம் சாதிக்கும் குணம் அவரிடம் என்றும் இருந்ததே இல்லை. இந்த இயந்திர வாழ்க்கையில், எதற்குமே நேரமில்லாத காரணத்தினால் Sirஐ நீண்டகாலம் என்னால் சந்திக்க முடியவில்லை. இருந்தாலும், நான் உடுப்பிட்டிக்கு வரும் போதெல்லாம் தற்போதைய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபரும் எனது உறவினருமாகிய திரு கிருஷ்ணகுமார் அவர்களிடம் Sir பற்றி விசாரிப்பது வழக்கம். அதிபர் அவர்கள் Sir இப்பொழுதும் எமது பாடசாலை வளர்ச்சிக்கு ஒரு ஆலோசகராக இருந்து பெரும் சேவையாற்றுவதாகச் சொன்னார். சில வருடங்களிற்கு முன் Sir பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டதாக அறிந்து மிக வேதனையடைந்தேன். நோய் என்னும் அரக்கனால் அவரது உடல் செயற்பாடுகளை முடக்க முடிந்ததே தவிர, அவரது சேவையும் அர்ப்பணிப்பும் தொடர்ந்து கொண்டேதான் இருந்தன.

எனக்கும் அவருக்குமுள்ள பிணைப்பு இருவருக்கும் மட்டுமே தெரிந்த ஒன்று. அதனால் தான் கடவுள் எனக்கு அவரது இறுதிச் சடங்கில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியதாகக் கருதுகின்றேன். மரணமென்பது எல்லோருக்கும் நிகழுகின்ற ஒன்று. ஒரு ஆசிரியரின் சிறப்பு என்பது அவர் தனது சேவைக் காலத்தில் எத்தனை சிறந்த மாணாக்கர்களை உருவாக்கியிருக்கின்றார் என்பதுதான். இந்த வகையில் Sir இன் சேவை அளப்பரியது. அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

# கைதரவல்ல கடவுள்

(திரு. செல்லத்துரை சுதர்சன்
தமிழ்த்துறை விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்)

1994 ஆம் ஆண்டு. முற்பகுதி. ஒரு நாள். சூரியன் தலைக்கேறும் ஒரு பொழுது. எமது இரைச்சல் சண்ணாவெட்டையை நிறைத்து வழிகிறது. இடைவேளைக்குத் தடைபோட எழுந்த மணி ஒலி. "மச்சான் தில்லையம்பலம் சேரடா", குரல் கேட்டு ஒலியை ஊடறுத்துப் பாய்ந்தோம். வகுப்பறைக்குள் நுழைந்தோம். அவர் எங்கள் வகுப்பறையைத் தாண்டி நடந்தார். வகுப்பறையுள் அன்று போல் என்று தான் அமைதியாய் இருந்தோம். எங்கள் வகுப்பே ஒரு பெருமூச்சுவிட்டு நிம்மதியானது. தப்பினோம்.. கொட்டில் முடிவுவரை நடந்தவர் திரும்பி வந்தார். வந்தவர் வகுப்பில் நுழைந்தார். அப்போது நாம் வெறும் பயத்துடன் மட்டும் எழும்பினோம். "குட்மோனிங் சேர்" என்றோம். "குட்மோனிங்... இருங்கோ" அவர் பார்வை நிலத்தைத் துளாவி எங்கள் முகம் வரை சென்றது. கிழிந்த கடதாசிகளைத்தான் வகுப்பறை மணலுக்குள் மூடிவிட்டோமே!.

எல்லோர் மேசையிலும் விரித்தபடி புத்தகம். கணிதபாடவேளை. அதுவும் இரண்டு பாடவேளை. பரிசளிப்பு விழா சில நாட்களுக்கு முன்னர் தான் முடிந்திருந்தது. "நாடகம் பழகச் சேர் வரச்சொன்னவர்" என்ற சாட்டும் இனிச்சரிவராது. வழமாக மாட்டிக் கொண்டோம்.

எல்லோரது மேசையிலும் விரித்தபடி புத்தகம். "என்ன எல்லோரும் புத்தகம் வாசிக்கிறியளோ?" "ஓம்சேர்" என்னை நோக்கி, "நீரும் வாசிக்கிறீரோ?", "ஓம் சேர்" "எல்லோரும் என்ன புத்தகம் வாசிக்கிறியள்?", "கணிதம் சேர்", "கணிதமோ?" "ஓம் சேர்" "ஓமோம்?" என்று சொல்லிவிட்டுச் சேர் சிரிக்கிறார். "வாசிக்கிறத்துக்குக் கணிதப் புத்தகமோ நல்லது?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் வாயைத்திறந்து சத்தத்துடன் சிரிக்கிறார் சேர். "என்னய்யா?" சொல்லுங்கோவன்" என்று கேட்டார். நாங்கள் வாயே திறக்கவில்லை.

"உங்கட ரீச்சர் இண்டைக்கு வரேல்ல. நான்தான் எடுக்கப் போறேன்". சரி ஒரு கணக்கைச் செய்து காட்டுவார். பின்னர் பயிற்சிப் பகுதியை நாங்கள் செய்து காட்டிவிடலாம். "புத்தகத்துக்குப் பின்னாலை விடையும் இருக்குத் தானே" என்ற நிம்மதி எங்களுக்கு,

திடீரென்று ஒரு குண்டு வெடிப்பு
*"கணிதம் எண்டா என்னய்யா?"*

பாடசாலையில் சேர்ந்த பத்துவருடமாக வெடிக்காத குண்டு வெடித்தது.

"எல்லோருக்கும் விழி முழியாகியது. "மொன்ரசொறியில் மண்டை சொறிஞ்ச காலத்திலயிருந்து இந்தக் கேள்விய யாரும் கேக்கல்லையே"- இது எங்கள் எல்லோரதும் ஏக்கம்.

சேர் கரும்பலகையை நோக்கி விரைகிறார். சோக்கட்டி விரைந்து பாய்கிறது கரும்பலகையின் முகத்தில்... "1+1" என்று எழுதிவிட்டு "இது எத்தனை ஐயா?" என்னை நோக்கிக் கேள்வி. "ரெண்டு சேர்" எனக்கு நல்ல சந்தோசம். இலகுவான கணக்குத்தானே. அவருக்கு விடை சொன்னதில் எனக்குள் ஒரு பெருமையும் கூட.

"விடைக்கு என்னையா செய்தனீர்?" திருப்பியும் கேள்வி. "கூட்டினன் சேர்". "எங்க கூட்டினீர்?" கொப்பீலையோ...? மேசேலயோ..? கரும்பலேலயோ..? எங்க ஐயா கூட்டினீர்?" கேள்விகள் அடுக்கடுக்காய் வந்துவிழுகின்றன. நடக்கிறார்... கரும்பலகையில் எழுதுகிறார்... மேசையில் கையால் அடித்துச் சில வினாக்கள் கேக்கிறார்... அவரது கைகள் காற்றில் கணிதக் கோலம் வரைகின்றன... விரல்கள் குவிந்து விரிந்து கணிதப் பரதம் செய்கின்றன... அவரது கணித ஆற்றுகையில் மீண்டும் கேள்விகள்.

மனித மனதின் உள்ளுணர்வைத் திறக்கும் கள்ளச்சாவி இவரிடமா இருக்கிறது? சிந்தனையில் ஒரு ரசாயனமாற்றம் நிகழத் தொடங்கியது. என்ன அற்புதமான மனிதர்!

"ஐயா... மனிதன்ர சிந்தனா வெளியின் ஒரு பகுதி தான் கணிதவெளி. அங்கதான் கூட்டினனி. அந்த வெளியில உள்ள கூறுகளை,

பகுதிகளை வைத்துச் சிந்திக்கிறவன்தான் கணிதன். Maths man- Mathematician. கணித வெளியிலயிருந்து வந்த கோட்பாடுகளும் சூத்திரங்களும்தான் ஐயா கணிதம் - Mathematics. என்னையா விளங்குதோ?"

"மனிதனுக்குள் ஒரு கணிதனா? யார் இவர்" "என்ன அற்புதமான கணிதக் கலைஞர்"- என் மனசு வியந்து விரிந்து உயர்ந்தது. மனசுக்குள் அவர் உட்கார்ந்து கொண்டார்.

"உதாரணமாகக் கணத்தாக்கு எண்டா..." என்று சொல்லிக் கொண்டே கண்கள் சிந்தனையைப் பாவனை பண்ண "அது ஐயா, அளவிடமுடியா நேரத்தில் தாக்கும் அளப்பரிய மிகப் பெரிய விசை" என்றார். ஏதோ ஒரு கணிதக் கலைச்சொல்லை அதன் தாற்பரியம் மாறாமல் இழுத்து வந்து இலகு தமிழில் வரையறை செய்கிறார் என்பது மட்டும் அப்போது எனக்கு விளங்கியது. பிற்காலத்தில் இந்த வரைவிலக்கணம் இவருடையது என்பதையும் இதன் பெறுமதியையும் பேராதனையில் நண்பர் சிலர்கூற அறிந்து பெருமிதம் கொண்டேன்.

"எண்ணும் எழுத்தும்.." என்று அவர் நீட்டி, குரலை உயர்த்த "கண்ணெனத்தகும்" என்று நாங்கள் முடித்தோம். "எண்ணெண்டா?" நான் "கணக்கு" என்றேன். "அப்ப எழுத்தெண்டா?" நான் "தமிழ்" என்றேன். சேர் சொன்னார் "கணக்கையும் எழுதுறாய் தானே? அப்ப தமிழை மட்டும் எப்படி எழுத்தெண்டனீர்?" எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "எண் எண்டா அதில கணக்கு இல்ல ஐயா... விளங்குதோ! எண் எண்டா சிந்தனை. எண்... எண்ணம்... எண்ணுதல்... சிந்தனை... சரியோ? ஐயா எழுத்து எண்டா சிந்தனையை எழுதுறது..." என்று தொடர்ந்தார். "எந்த எழுத்துக்கும் அடிப்படை சிந்தனைதான் ஐயா" என்றார். "தமிழும் கணிதமும் முதல்ல சிந்தனை ஐயா... பிறகுதான் பாரும் எழுத்தில வரும்" என்றார்.

எனது சிந்தனை மனத்தைத் (concious mind) திறந்து கொண்டிருக்கும்போது பாடவேளை முடிந்தது. மணி அடித்தது. கணித பாடமுடிவில் வழமையாக அடிக்கும் மணி மகிழ்ச்சி தரும். அதற்கு மாறாக அன்றைய மணி ஒலி எனக்கிருந்தது. மணி ஏன் அடித்தது? என்ற வெறுப்பு உணர்வு மேலோங்கியது. மணி ஒலியுடன் "நல்லா இருங்கோ... நல்லா இருங்கோ" என்று சொல்லிக் கொண்டு சேர் வெளியேறினார்.

மணியின் ஒலிக்கும் அவரது இறுதிவார்த்தைக்கும் ஏதோ ஒரு தொடர்பிருப்பதாய்த் தோன்றியது. வெறும் பயத்துடன்மட்டும் நான் மரியாதை செலுத்தும் ஒருவர் பயத்துக்குரியவராகவே வகுப்பினுள் நுழைந்து பாடம் முடித்து வெளியேறும்போது என் பக்திக்குரியவராக வெளியேறினார். நான் பக்தனானேன். அவர் கடவுளானார். மணி ஒலித்தது. "நல்லா இருங்கோ" என்ற ஆசி கிடைத்தது. அதன் பிறகு அவர் வகுப்புக்கு வரவில்லை. எனது கணிதமும் அதன் பிறகு கணிதவெளியைத் தாண்டவில்லை. ஆனால், பாட ஆசிரியர் வராத வேளையில் வந்தவர் சிந்தனை மனதை விரித்துவிட்டதால் அந்த வேளையில் மட்டுமல்ல எந்தவேளையிலும் கைதரவல்ல கடவுளானார்.

எதனையும் வித்தியாசமாக நோக்கும் அவரது ஆற்றலும் பேசிக் கொண்டிருக்கும் போதே பேசுபவரின் சிந்தனையைத் திறக்கும் அவர் திறனும் என்னை அவர்பால் ஈர்க்க வைத்தன. புலமையும் எளிமையும் உடைய இவரின் பணிவும் நேர்மையும் என்னைக் கவர்ந்தவை. இந்த ஒரு சிறுவியாசத்தினுள் அவரின் முழு நிறைவையும் அடக்கிவிடமுடியாது. எனது ரீச்சர், ராஜ் அண்ணா, வேணுகா அக்கா, பானு ஆகியோர் தம்மைப்போல என்னையும் நேசிப்பவர்கள். சேருடன் நான் கொண்ட நட்பின் இறுக்கம் அவர்களுக்கும் தெரியும். அவர்களுள் ஒருவனாய் நானும் இருந்திருக்கிறேன். அவர்களுடன் கடவுள் என்னையும் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறான்.

தில்லையம்பலம் சேர் சான்றாண்மைக் குணங்களின் மனித வடிவம். மனித வடிவில் எனக்கும் என்போன்ற பலருக்கும் பல வேளைகளில் கைகொடுத்து உதவியதால் கைதரவல்ல கடவுளானார். மாணிக்கவாசகர் பிறவிப்பெரும் கடலில் துன்பப்படும் ஆன்மாவாகிய தன்னைக் கைதந்து தூக்கிய கடவுளைக் "கைதரவல்ல கடவுள் போற்றி" என்று போற்றி வணங்குகிறார். என் வாழ்க்கையோடு இணைந்த தில்லையம்பலம் சேரையும் மாணிக்கவாசகரின் இந்த அடியைச் சொல்லி யே வணங்குகிறேன்.

"கைதரவல்ல கடவுள் போற்றி"

## The Guru and The Student

(Mr. S.Mathiroban U/A.M.C, A/L 92 Maths - Senior Geotechnical Engineer - AMEC Americas Ltd.)

*Incident 1: Date: 19th March, 2014. Place: Calgary, Alberta, Canada*

Yedu Dayal, a 24 years old enthusiastic, and a determined student of Taekwondo martial arts institute was test riding his friend's motorbike. He was so determined to get his black belt in Taekwondo, a Korean martial art form. He was so dedicated to the art that he went to the class 6 days a week, went early to help his 'Guru' (the Sanskrit word 'Guru' means teacher, but it brings other supporting adjectives to the meaning such as 'respectable', 'venerable', 'highly prized' etc. So, let me use the Sanskrit word 'Guru' in lieu of English word 'teacher') teach Taekwondo to kids. Then he will learn higher degrees of Taekwondo, its minute tactics and techniques from his Guru with obedience and respect. He is just about to get his black belt in days to come. The motorbike he was riding got into some pea gravel (spread to keep give traction in snowy condition), slipped, hit a light post, and took the life of young Yedu Dayal!!

On the day of his funeral ceremony, his Taekwondo Guru gave a parting speech on how dedicated, disciplined the student was, and laid the black belt he aimed for his body. Only the Guru has the right to do this.

*Incident 2 (from the epic Mahabharatham): Date: $8^{th}$ to $9^{th}$ century B.C., Place: India*

Ekalivan was a young lad born to a lower tribe, but enthusiastic and determined to master archery and martial art. His opportunity to learn the art was rejected on the basis of the tribe he was born. Being resolute and with the will to master archery, he went into the forest and made a statue of Drona the Guru from whom he sought education. In front of the statute of his Guru, he began a disciplined program of self-study over years, and became the master in the field of archery and martial art.

Discipline, determination, and respect to his Guru are all what student needs to master in the field of interest. Respect to one's teacher has the power to bring him to mastery level in the field he seek mastery.

The above two incidents, happened in two different ages and two different places, signifies the power of The Teacher (Guru) The Student relationship.

In the modern era we live, changes in style of teaching and learning is so dramatic that teacher student relationship is just a giver receiver relationship. But, I had the golden opportunity to learn and master (to some extent) what I sought under the teaching of my Guru late Mr. Thillaiyampalam. Thanks to the civil war of 1980s and 1990s...my school was bombarded and destroyed, which forced the Advanced Level (A/L) students of

Uduppiddy American Mission College to move to the 'class room' located in our Guru's house. He had made a hut under a tamarind tree in his front yard. This hut was the place where lots of youngsters who had the dream of becoming engineers, scientists, technicians, and teachers received their fundamentals in mathematics.

room' located in our Guru's house. He had made a hut under a tamarind tree in his front yard. This hut was the place where lots of youngsters who had the dream of becoming engineers, scientists, technicians, and teachers received their fundamentals in mathematics.

While students were focused on getting the syllabus completed so they can do more sums mechanically, our Guru's love of teaching and love for students was so intense and genuine that he would take 3 to 4 months to explain the fundamental. Those who studied from him would remember his classical style of starting the first day of Pure Mathematics class with the question "what is this?" showing his index finger. From that, he would continue to explain commutative, distributive, and associative laws of mathematics. Apart from mathematics, he would also explain the difference between 'laws', 'principles', 'theory', and 'hypothesis'. I am sure all those who did their higher education would have benefited from his teaching of fundamental mathematics which he imprinted on us like inserting a needle into a banana.

While I was appreciative of his teaching, it took me long time to recognize his hidden love for his students, and the care he had on all his students' personal/career life. From the time I left

Uduppiddy in 1996, whenever I visit Uduppiddy, I first visit him, and update him on my career and personal life. When I visited in 2005 (which was the last visit I made to Uduppiddy) for my wedding, I failed to visit due to wedding preparations. With his ill health, he got a ride from someone, visited my house, and waiting for me till I returned home that night!! That showed his love and care he showed on his students.
love and care he showed on his students.

"You have 3 kids, I have 43 kids" was his answer when his wife asked him to attend a temple apishegam offered by his son Rajkumar. Dodging the family function, he drove to Nelliyady to teach mathematics for his 43 kids.

There are so many instances I can write to illustrate late Mr.Thillaiyampalam's love of teaching and care on his students. But, I have to stop here to respect readers' time and the purpose of this booklet.

*Incident 3: Date: 18th March, 2014. Place: Uduppiddy, Sri Lanka*

He was so disturbed by a tragic incident that happened to one of his student's family. Last couple of days, he couldn't concentrate on his teaching, and sent students back home in the middle of the class. He wanted to visit the student's family and console them for whatever happened. He visited the family, in person to console the family, and my Guru Mr.Thillaiyampalam's soul departed the material world.

*Incident 4: Date: 18th March, 2014. Place: Milton, Ontario, Canada*

It was my daughter Saieshaa's 31st day of birth…a significant day in child's life as the priest come home, does his rituals, and gives his blessings to the child. He asked us to get the blessings from all five elements (earth, water, air, fire, and ether), parents, Gurus, and lity.
Gods. As I bring in my mind through all my Gurus and finish the 31st day formalities, the phone rang to give the parting message of my Guru Mr. Thillaiyampalam!! May his soul unite with the eternal, omnipotent, ultimate Reality.

Let me finish my account with the following phrase (translated from Sanskrit):

*"Om, May God protect us both (The Guru and The Student);*
*May God nourish us both;*
*May we work together with energy and vigour;*
*May our study be enlightening and not give rise to hostility;*
*Om Peace, Peace, Peace".*

# An Everlasting Gratitude to my Guru

(Mr. S.A. Cader - Engineer - Student of Maths Man)

About ten days ago, I went to meet my manager Mr. Balandran for the approval of a few construction drawings that I reviewed. At the time he was discussing certain company matters with another engineer, Ms. Chitra Perera. All of us are engineers qualified from the engineering faculty of the University of Peradeniya.

After I got the drawings stamped, the topic of our discussion changed to memories of our school days. I told them of the difficulties I had faced while studying Advanced Level Bio Science. I had written my Advanced Level exams twice, but had failed Zoology in both attempts. Therefore, I took up teaching with a firm resolution to not try again for Bio Science. However, I had a natural aptitude for Mathematics, so I wanted to change over into the Math section, which included pure and applied mathematics, both of which I had never studied in school. I was in a difficult situation, because I had left school and was by then a science teacher. The only way to learn everything I missed was to get tuition.

It was during this time that I was attending a teacher training programme at the Training College at Palaly, which is where I first met Mr. Thillaiyampalam. After completing the training program, I was posted to Zahira College, Gampola. In Gampola there were no tuition classes available, so I decided to go to Kandy for tuition. Due to the short notice, I was only able to get tuition in pure mathematics. I had never studied Advanced Level Mathematics, but was attending a class with school children who already knew the material. It made the subject difficult for me. Only after wasting the year did I realize the effort was futile.

I then heard that Mr. Thillaiyampalam was willing to come to the Kandy area after completing his training program. I requested the principal to bring him to Zahira College, as he was an excellent teacher, so the students could benefit from him. At the same time, I could also get help from him.

When Mr. Thillaiyampalam arrived at the Gampola Railway Station, I was there to meet him to take him to my room at Illawatura. He was happy to see me, and when my predicament became known to him he offered to teach me pure and applied mathematics so that I could try engineering. I accepted his offer with relief and he immediately began teaching me, which was a daunting task for him, as I had no prior knowledge of the subjects. His classes would go until 12 or 1 o'clock at night almost daily, as he worked to teach me the entire syllabus in a short two years.

Out of respect and gratitude, I started calling him Guru and all our friends followed suit, since then I have never called him by his family name.

On my way to my village Pottuvil for the Advanced Level exams, I visited his house to inform him of my leave and to ask for his good wishes. He told me that up until me, he had only taught students who had already learned mathematics prior to coming to him. In my case, I had been taught everything exclusively by him, and he was confident I would succeed. He put in so much effort to teach me, but did not accept anything in return. I have never met such a good hearted person in my life.

When I wrote the Advanced Level exams in 1974, I produced the best results in my district of Ampara. With the help of God, the credit of my success goes to him.

Bala and Chitra were amazed and impressed by Mr. Thillaiyampalam's efforts.

It was to my shock that the very next day I received word from Mr. Thillaiyampalam's family that he had passed away. I could not control my feelings, and who can explain the coincidence?

When can I pay back my Guru? My close connection with his family will, of course, continue. He was one of the best teachers in Sri Lan' a, known for his successful methods of teaching. All his stu..ents are doing well in different parts of the world. Many lecturers, engineers, PhD holders, and graduates are among them. The present head of the Department of Civil Engineering at the Faculty of Engineering at Peradeniya is also his student.

Mr. Thillaiyampalam was honest, duty-conscious, respected by the entire community, and cherished by his family and friends. He was a loving father who dedicated his life to his family, and as a result all his children grew up to be like their father: good and extremely successful people.

No man is immortal.

He leaves behind a family and community that will continue to cherish and remember him.

# ஆசிரிய நண்பன்

## அணையாச் செழுஞ்சுடர்

(பொறியியலாளர் மாணிக்வாசகர்
தமிழ் பொறியியலாளர் அமைப்பு - அவுஸ்திரேலியா)

தில்லை அண்ணாவே தேடரிய திவ்வியரே
எல்லையிலாத் துயரில் எமையாழ்த்திச் சென்றீரே
சொல்லொணா நன்றிதான் சோர்வை எமக்குண்டுபண்ண
வில்லின் அம்புபோனதென விரைந்துநீர் போனீரே.
ஆசிரியன் ஆசானே அன்பின் உறைவிடமே
பேசரிய குணக்குன்றே பெருமைதரு நண்பனே
நேசமுடன் மாணவர்க்கு நிறைதொண்டு செய்தவரே
பாசமுடன் அவர்தமக்குப் பலஉதவி செய்தீரே.
நற்புத்தி சொல்லிடவும் நல்லாசி தந்திடவும்
பற்பலவாய் அறிவுரைகள் பகர்ந்து வழிகாட்டிடவும்
உற்றிடு சமுதாய ஊழியனாய் நின்றிடவும்
சுற்றம் தனைப்பேணிச் சோர்வகற்ற யாருளரோ?
துணைவியார் துணையுடனே தோன்றாத் துணையாக
இணையாக நீவிர் இயற்றிய சமூகப்பணிஎன்றும்
அணையா விளக்காக அவ்வூரின் மக்களுக்குத்
துணையா நின்றதையா துலங்கும் உம்புகழே.
மாட்டுவண்டி நீரேறி மகிழ்ச்சியுடன் ஊரவர்க்கு
தோட்டம் கட்டுவதும் தொண்டென்று செய்து
கேட்டவுடன் ஓடிவந்து கிடைத்தபொருள் நீர்பகிர்ந்து
நாட்டுப் புறத்திலொரு நல்லவராய் வாழ்ந்தீரே.
வல்வெட்டித் துறையில் வகைசெய் எள்ளுப்பா
சொல்லிநீர் உண்ணும் சுவைகேட்டு வாயூறும்
எல்லையிலா இன்பம் எம்நினைவில் வருகுதையா
வல்லவராய் நல்லவராய் வாழ்வாங்கு வாழ்ந்தீரையா.
பொறியியல் அமைப்பினர் பொதுத் தராதர

நெறியில் உயர்சித்தி நிலைபெற்ற மாணவர்க்கு
அறிவார்ந்த விருது ஆண்டுபத்தாய் வழங்கும்
குறியுங்கள் ஆதரவின் கொள்கை நினைவையா.
நண்பனாய் ஆசிரியனாய் நாடறிந்த சேவகனாய்
எண்ணரிய மாணவர்க்கு ஏற்றிவைத்த செழுஞ்சுடராய்
பண்புநலன் பலவும் பக்குவமாய் வாய்த்திட்ட
அண்ணலை அனைவரும் அன்புடன் நினைவோமே.

**TAMIL ENGINEERS FOUNDATION**



Engineers Charity Fund CFN/21837



**தில்லை அண்ணா**

தில்லை அண்ணாவின் திடீர் மறைவு தாங்கொணா துயரத்தில் எம்மை ஆழ்த்திவிட்டது. தில்லை அண்ணா மாணவர் சமூகத்திற்கு ஆற்றிய சேவை அளப்பரிய சேவை. பல மாணவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பல வகையிலும் உதவி புரிந்த ஒரு உயர்ந்த ஆசான், ஆசிரியர், நண்பன் எம்மை விட்டு பிரிந்தது மிக வேதனையை அளிக்கின்றது

மாணவர்களிற்கு இருப்பிட வசதி, வசதியற்றோருக்கு இலவச பாடம் படிப்பித்தல், அன்புடன் உணவு அருந்துவதற்கு ஆவன செய்தல், தேவையான நல் ஆலோசனைகளை வழங்குதல், பாரியருடன் இணைந்து சமூகத்தின் நலனிற்காக முழு மூச்சுடன் உழைத்தல் என்பன அவரை நினைவு கூரும் இந்நாளில் குறிப்பிடக் கூடியவை.

தாயாரை இளவயதில் இழந்த போதும் அவரது தகப்பனுடன் சேர்ந்து அவரது சகோதரிகளின் உறவினரோடு அயலவர்க்கும் மாணவர்களுக்கும் உதவியதை மறக்க முடியாது.

அவருக்கு பிடித்த உணவில் வல்வெட்டித்துறையில் தயாராகும் எள்ளுப்பா மிகவும் முக்கிய இடத்தை பிடித்திருந்தது. மாட்டு வண்டியில் சென்று ஊர்களுக்கு தோட்டம் செய்வதற்கு உதவியதையும் மறக்க முடியாது.

எங்களது தமிழ் பொறியியலாளர் அமைப்பானது மாணவர்களிற்குரிய சேவைகளில் ஒன்றாக க.பொ.த உயர்தர பரீட்சையில் (GCE A/L) சிறந்த பெறுபேறுகள் பெறும் 10 மாணவர்களுக்கு வருடாந்த விருது வழங்கி வருகிறது. இந்த நிகழ்வை கடந்த பல வருடங்களாக மாகாண ரீதியாக சிறப்பாக நடத்தி தனக்கு மாணவர்களின் படிப்பில் இருக்கும் ஆர்வத்தை தில்லை அண்ணா உணர்த்தினார்.

அவரை ஒரு நல் ஆசானாக, பண்பாளனாக, ஒரு உடன் பிறவா அண்ணனாகவும் சிறந்த நண்பனாகவும் இந்நாளில் நினைவு கூர்கின்றோம்.

தமிழ் பொறியியலாளர் அமைப்பு, அவுஸ்திரேலியா

www.tamilengineers.net

# தில்லையம்பலம் ஐயாவும் உயர்வகுப்புக் கணிதமும்

(சமரபாகு சீனா உதயகுமார்)

உயர் வகுப்புக் கணிதம் சொல்லித் தருவதில் வித்தகர் நீங்கள்
நகைச்சுவைதனை கணிதம் கற்றலுக்குள் புகுத்திய கணிதர் நீங்கள்
வேப்பங்காய் போல் கைக்கும் கடும் கணக்குகளுக்கும் நீங்கள்
மோப்பம் பிடித்துத் தரும் நுணுக்க விளக்கங்களும் உயர்வுதான், ஐயா!
அல்ஜிபிறா கணக்குகள் அள்ளித் தந்து
கணித அலுப்புகள் தீர்ப்பவர் நீங்கள்
கல்குலஸ் கணக்குகள் சொல்லித் தந்து
கணித சமன்பாடுகளில் தைரியம் வளர்ப்பவர் நீங்கள்தான், ஐயா!
வேகநேர வரைபு கற்பித்தால்
வேகமாய் நேரம் போவதை மாணவரும் உணர்ந்திடுவர்
தொடர்பு வேகம் கற்பித்தால்
கடல் பீரங்கிக் கப்பலும் எகிறிப் பறக்கும் போர் விமானமும்
இப்படித்தான் சுட்டு வீழ்த்துவது என்று
கச்சிதமாய் எறியம் சொல்லித் தந்தவர் நீங்கள்தான், ஐயா!
மொத்தல் சொல்லித் தந்தீர்கள்
விளங்கவில்லை என்றால் கேளுங்கள் பிள்ளைகள்
விளங்குவது போல் நடிப்பவருக்கு நிச்சயம்
மொத்துவேன் என்று கணத்தாக்கமாய் சொல்லுபவரும் நீங்கள்தான், ஐயா!
வட்டம் இயக்கம் சொல்லித் தந்து
எங்களை வட்டமடித்து நோட்டமிடுபவர் நீங்கள்
பின் நின்று எட்டிப் பார்த்துக் குட்டுவீர்கள்

குதூகலமாவது எங்கள் வகுப்பு மட்டுமில்லை
சோதர உயிரியல் வகுப்பும்தான், ஐயா!
ஆள்கூற்றுக் கேத்திர கணிதம் புள்ளிகள் அள்ளித் தரும்
வடிவாகக் கவனியுங்கள் என்றீர்கள்
காவிகளின் பெருக்கம் இரண்டுண்டு
அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம் என்றீர்கள், ஐயா!
ஐயா..! தில்லையம்பலம் ஐயா..!
உங்களை எப்படி நாம் மறப்போம் ஐயா!
சிரிப்புக்கதைகள் சொல்லிவிட்டு
நீங்கள் மட்டும் சிரிக்காமல் இருப்பீர்கள்
சிரித்து ரசித்தபடி கணித வகுப்பு முடியும்
நீங்கள் சொல்லித் தந்த அத்தனையும்
அத்தனை பேருக்கும் அத்துப்படியாகப் புரியும்!
ஐயா..!தில்லையம்பலம் ஐயா..!
உங்கள் கால் பாதங்கள் தொட்டு வணங்குகிறோம்
எதிலும்..! எங்கேயும்..!
சிரித்தபடி இருந்து சிங்காரக் கதை சொல்லும்
வஞ்சகமில்லாத வெள்ளை உள்ளம்
உங்கள் வெள்ளை மனக் கணித உள்ளம்!
மாணவர் எல்லோருக்கும் விளங்கும் தூய உள்ளந்தனை
மாணவ சந்ததிக்கும் பிரயோக உள்ளமாய்ப் புரியவைப்போம், ஐயா!
வெள்ளைமன ஐயாவின் கணித உள்ளம்
ஆத்மா சாந்தி அடைவதாக!

# சிரித்திடும் போதிலும் சிந்தனை வீசினாய்

(செல்வி. ரமணி பொன்னையா - உறவினர்)

மனிதனாய் வந்தொரு கணிதனாய் மறைந்தாய்
மண்ணிலே மாணவர்க் கமுதென நிறைந்தாய்
கனியிலும் சுவையெனக் கணிதமே நயந்தாய்
கண்கள் நீர் வடித்திட எங்கு நீ பறந்தாய்
வகுத்தலும் கூட்டலும் ஆனதோர் கல்வியைப்
புகுத்தலும் கடனெனப் புவியிலே உலவினாய்
பெருக்குதல் அன்பெ . மனிதரைப் பேணியே
உருக்குமோர் உண்மையாம் உருவிலே நிலவினாய்
சிரித்திடும் போதிலும் சிந்தனை வீசினாய்
சீறிடும் போதிலும் சிந்தனை கிளறினாய்
எரித்திடும் தீமைகள் எரித்திட என்று நீ
எண்ணையும் எழுத்தையும் ஆயுதமாக்கினாய்
கல்லூரி தீயினில் கருகிடும் போதினில்
கண்களில் நீருடன் கலங்கியே கதறினாய்
பல்லோரும் ஏத்திட நிமிர்ந்திடும் போதிலே
பாசத்தில் தாய்நிகர் உள்ளத்தில் உருகினாய்
களத்தீ நெருப்பிலும் கல்லூரி அதிபராய்
உளத்திலே உறுதியை ஊருக்கு ஊட்டினாய்
வளத்திலே மாணவர் ஓங்கிடும் போதிலே
வண்டினைப் போலவே ரீங்காரம் பாடினாய்
எப்பிள்ளை தன்னிலும் உம்பிள்ளையைக் கண்டு
தப்பில்லா வழிகளைத் தரணிக்கு வழங்கினாய்
இலக்கியச் சுவையிலே இதயத்தை இருத்தினாய்
இதயத்தை உண்மைக்காய் என்றுமே வருத்தினாய்
கலக்கிய இன்னலும் கண்டுமே நடுங்கிடக்
கனதியாய்க் கல்லூரி நிமிர்ந்திட உதவினாய்
ஊரிலும் சேவையை ஊறிவாய் பேசிட
உத்தம வடிவொடு உலவியே பழகினாய்
பாரில் நீ இனிவரும் வழியெதிர் பார்த்துமே
பலருடன் நானுமாய் ஏங்கியே நிற்கிறேன்.

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர் 18.04.2014 அன்று வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்ததிலிருந்து இன்றுவரை அவரது பிரிவுத் துயரத்தைத் தாங்கிக்கொள்ளும் வலுவைத்தந்த இறைவனுக்கு முதலில் எமது நன்றிகள்.

அன்னார் திடீரென அதிக நோய்வாய்ப்பட்டபோது அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நண்பர்கள், மாணவச் செல்வங்கள், முதலியோருக்கும், ஊறணி வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் முதலியோருக்கும் உடன் வந்து உதவிய மாணவர்கள் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளைச் சிறப்புற நடத்திய குருக்கள் ஐயா அவர்களுக்கும், அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய கல்விச் சமூகத்தினருக்கும், அஞ்சலிப் பதாதைகள், மலர் வளையங்கள், மற்றும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகள்.


நம் நாட்டிலும், சர்வதேச நாடுகளிலும் இருந்து தொலைபேசி மற்றும் மின்அஞ்சல் வாயிலாகத் தொடர்புகொண்டு அஞ்சலி தெரிவித்தோருக்கும், முகப்புத் தளங்களிலும், இணையத்தளங்களிலும் அஞ்சலி தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள்.

18.05.2014அன்று நடைபெற்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

அமரர் மீது கொண்ட அன்பினால், கணிதன் என்ற இம் மலருக்கான நினைவுப்பதிவுகளை அனுப்பிவைத்த அனைவருக்கும், மலரை அச்சுக்கலையால் அழகுபடுத்திய குரு பதிப்பகத்தினருக்கும். எமது நன்றிகள்.

**குடும்பத்தினர்**

*Guru Printers, 39/2, Adiyapatham Road, Thirunelvely.*


simple pend
physical pend
critical damped
under damped
over damped
heat capacity
specific heat
heat of transformation
emissivity
Multi Slab
(isothermal)
(adiabatic)
monatomic
Diatomic
Polyatomic
energy we get
energy we pay for
what we want
what we pay for